winmeen.com

# 1 MARK, 2 MARK QUESTIONS

## 6ஆம் வகுப்பு சமூக அறிவியல் இரண்டாம் பருவம்



## 6ஆம் வகுப்பு இரண்டாம் பருவம்

## சமூக அறிவியல் ஒரு மதிப்பெண் இரண்டு மதிப்பெண் வினாக்கள்


| பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|
| வரலாறு | |
| 1. வட இந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும் | 2 |
| 2. மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும் | 8 |
| 3. குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை | 16 |
| புவியியல் | |
| 1. வளங்கள் | 24 |
| குடிமையியல் | |
| 1. தேசியச் சின்னங்கள் | 32 |
| 2. இந்திய அரசியலமைப்புச் சட்டம் | 40 |
| பொருளியல் | |
| 1. பொருளியல் – ஓர் அறிமுகம் | 45 |

## வரலாறு

# 1. வட இந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும்

**வேதகாலம்** என்பது ஆரியர்களின் வருகையால் தொடங்கியது. ஆரியர்கள் இந்தோ-ஆரிய மொழி பேசக் கூடியவர்கள். இவர்கள் கால்நடை மேய்ப்பவர்கள். இடம் விட்டு இடம் குடிபெயர்ந்து செல்லக்கூடியவர்கள். இந்த ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து இந்துகுஷ் மலைகளில் உள்ள **கைபர் கணவாய்** வழியாக வந்தனர். இவர்கள் **அழித்து எரித்து சாகுபடி** செய்யும் வேளாண்முறையைப் பின்பற்றினர். ரிக் வேதகாலத்தில் ஆரியர்களின் வாழ்விடம் பஞ்சாப் ஆகும். இது ஏழு ஆறுகள் ஓடும் நிலப்பகுதியாக இருந்ததால் **சப்தசிந்து** என அழைக்கப்பட்டது. வேதகாலத்தில் இரும்பினால் ஆகிய வேளாண் கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

வேதகால இலக்கியங்கள் **(i) சுருதிகள், (ii) ஸ்மிருதிகள்** என இரு வகைப்படும். **சுருதிகள்** என்பன நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்களை உள்ளடக்கியதாகும். இவை நிலையானவை. **ஸ்மிருதிகள்** ஆகமங்கள், தாந்திரீகங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இவை நிலையானவை அல்ல. மாற்றங்களுக்கு உட்பட்டவை. ரிக்வேத கால அரசியல் ரத்த உறவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். குலம் என்ற அரசியல் அடிப்படையின் தலைவர் குலபதி ஆவார். பல குடும்பங்கள் சேர்ந்து கிராமங்கள் உருவாயின. கிராமங்களின் தலைவர் **கிராமணி** ஆவார். பல கிராமங்கள் சேர்ந்து **விஸ்** எனப்பட்டது. இதற்கு **விஜயபதி** தலைவர் ஆவார்.

இனக்குழுவின் தலைவர் **ராஜன்** ஆவார். அவரது அதிகாரம் விதாதா, சபா, சமிதி, கணா ஆகிய அமைப்புகளால் கட்டுப்படுத்தப்பட்டது. பின் வேதகாலத்தில் பல இனக்குழுக்கள் இணைக்கப்பட்டு ஜனபதங்கள் அல்லது **ராஷ்டிரங்கள்** உருவாயின. தொடக்க வேதகால சமுதாயத்தில் பொதுமக்கள் விஸ் என்றும் போர் வீரர்கள் சத்ரியர்கள் என்றும், மதகுருமார்கள் பிராமணர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். பிற்காலத்தில் நில உடைமையாளர்களாகிய வைசியர், வேலைத்திறன் கொண்ட சூத்திரர் என்ற சமூக அமைப்பு உருவானது. ரிக் வேதகாலத்தில் குழந்தைத்திருமணம், உடன்கட்டை ஏறுதல் கிடையாது. பெண்களுக்கு பெற்றோரிடமிருந்து சொத்துரிமையும் கிடையாது. பெண் கல்வி, கைம்பெண் மறுமணம் மறுக்கப்பட்டன.

சிந்து, பஞ்சாப் பகுதிகளில் குடியேறிய ஆரியர்கள் வேளாண்மை செய்யத் தொடங்கினர். யவா (பார்லி) அவர்களின் முதன்மைப் பயிராகும். பின்வேத காலத்தில் பசு, வெள்ளாடு, செம்மறியாடு, குதிரை, யானை ஆகியவை பயன்படுத்தப்பட்டன. சாயத் தொழில் செய்வோர், இரும்பு உருக்குவோர்

போன்றோரும் இருந்தனர் . **பண்டமாற்றுமுறை** பரவலாகக் காணப்பட்டது. **நிஷ்கா, சத்மனா** என்ற தங்க நாணயங்களும் **கிருஷ்ணாலா** என்ற வெள்ளி நாணயமும் பயன்படுத்தப்பட்டன. ரிக்வேத கால மக்கள் தங்கம், இரும்பு, தாமிரம் ஆகியவற்றை அறிந்திருந்தனர். நிலம் மற்றும் ஆகாய கடவுளர்களை அவர்கள் வழிபட்டனர். பிரஜாபதி, (படைப்பவர்) விஷ்ணு (காப்பவர்), ருத்ரன்(அழிப்பவர்) ஆகிய கடவுள்கள் முக்கியத்துவம் பெற்றனர்.

குருகுலக் கல்விமுறை இங்கு இருந்தது. மாணவர்கள் ஆசிரியர்களுடன் தங்கியிருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்து கல்வி கற்றனர். வாய்மொழி மரபில் கல்வி கற்பிக்கப்பட்டது. பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வனப்பிரஸ்தம் , சன்னியாசம் ஆகியவை வாழ்வில் நான்கு கோட்பாடுகளாக உருவாக்கப்பட்டன. மக்கள் செம்பையும் கல்லையும் ஒரே காலகட்டத்தில் பயன்படுத்தியதால் இது **செம்புக்கல் காலகட்டம்** என்று அழைக்கப்பட்டது. இரும்புக் காலத்தின் முடிவில் பெருங்கற்காலப் பண்பாடு உருவானது . இறந்தவர்களைப் புதைத்த இடங்களை பெரிய கற்பலகைகளைக் கொண்டு மூடியதால் இக்காலம் **பெருங்கற்காலம்** என அழைக்கப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள **ஆதிச்சநல்லூர்** அகழாய்வில் முதுமக்கள் தாழிகள், கருப்பு சிவப்பு மட்பாண்டங்கள், இரும்பு ஆயுதங்கள், தங்க ஆபரணங்கள் கிடைத்துள்ளன. சிவகங்கை மாவட்டத்தில் உள்ள **கீழடி** அகழாய்வில் செங்கற்களால் கட்டப்பட்ட கட்டிடங்கள், வடிகால் அமைப்பு ஆகிய சான்றுகள் கிடைத்துள்ளன. தமிழ்-பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மண்பாண்டங்களும், மணிகள், முத்துக்கள், சங்கு வளையல்கள், இரும்புப் பொருள்கள், தங்க ஆபரணங்கள் போன்றவை தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இப்பொருள்கள் கி.மு 200 ஐச் சார்ந்தவை என்றும், இந்தியாவிற்கும் ரோம் நாட்டிற்குமிடையே அக்காலத்தில் வணிகத்தொடர்பு இருந்த்தென்றும் நம்மால் அறியமுடிகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள **பொருந்தல்** என்ற ஊரில் கண்ணாடி மணிகள், இரும்பு வாள்கள், தமிழ்-பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட மண்பாண்டங்கள், அரிசி நிரப்பப்பட்ட மட்பாண்டங்கள் ஆகியவை கிடைத்துள்ளன. வேலூர் மாவட்டத்தில் உள்ளை **பையம்பள்ளி**யிலும், ஈரோடு மாவட்டத்திலுள்ள **கொடுமணல்** என்ற ஊரிலும் அரிய சான்றுகல் கிடைத்துள்ளன. இறந்தவர்களை புதைத்த இடத்தில் இரண்டு கற்பலகைகள் நடப்பட்டு அவற்றின் மேல் மற்றொரு கற்பலகை படுக்கை வசத்தில் வைக்கப்பட்டுள்ளது. இவை **கற்திட்டைகள்** எனப்படுகின்றன. இவை கும்மாளமருதுப்பட்டி, வீரராகவபுரம் , நரசிங்கப்பட்டி ஆகிய ஊர்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிங்காரிபாளையம், வெம்பூர் ஆகிய இடங்களில் ஒரே கல்லினால் ஆகிய **நினைவுக் கற்கள்** கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நடுகற்கள், மானூர், வெள்ளாளன் கோட்டை, புலிமான்கோம்பை ஆகிய ஊர்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**I. சரியான விடையை தேர்ந்தெடு.**

1. ஆரியர்கள் முதலில் _______ பகுதியில் குடியமர்ந்தனர்.

**அ. பஞ்சாப்** ஆ. கங்கைச் சமவெளியின் மத்தியப் பகுதி

இ. காஷ்மீர் ஈ. வடகிழக்கு

2. ஆரியர்கள் ________ லிருந்து வந்தனர்.

அ. சீனா ஆ. வடக்கு ஆசியா

இ. **மத்திய ஆசியா** ஈ. ஐரோப்பா

3. நம் நாட்டின் தேசியக் குறிக்கோள் “வாய்மையே வெல்லும்” __________ லிருந்து எடுக்கப்பட்டது.

அ. பிராமணா ஆ. ஆரண்யகா

இ. வேதம் ஈ. **உபநிடதம்**

4. வேத காலத்தில் என்ன விகிதத்தில் நிலவரி வசூலிக்கப்பட்டது?

அ. 1/3 ஆ. **1/6** இ. 1/8 ஈ. 1/9

**II. கூற்றைக் காரணத்துடன் ஒப்பிடுக. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. கூற்று:** வேதகாலம் குறித்து கற்க அதிக அளவு இலக்கியச் சான்றுகள் மற்றும் பயன்பாட்டு பொருள் சான்றுகள் கிடைத்துள்ளன.

**காரணம்:** நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள் மற்றும் உபநிடத்ங்களை உள்ளடக்கியதே சுருதிகளாகும்.

**அ. கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.**

ஆ. கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

இ. கூற்று சரி; காரணம் தவறு

ஈ. கூற்று தவறு; காரணம் சரி

2. **கூற்று 1:** தீபகற்ப இந்தியாவிலிருந்து ரோம் நாட்டிற்கு எஃகு ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும் அதன்மீது அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வரி விதிக்கப்பட்டது என்றும் பெரிப்பிளஸ் குறிப்பிடுகிறார்.

**கூற்று 2:** இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் பையம்பள்ளியில் கிடைத்துள்ளன.

அ. கூற்று 1 தவறானது.

ஆ. கூற்று 2 தவறானது.

இ. **இரண்டு கூற்றுகளும் சரியானவை**

ஈ. இரண்டு கூற்றுகளும் தவறானவை

3. வேதகால சமூகம் தொடர்பான கிழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது தவறானது?

அ. ஒரு கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளலாம்.

**ஆ. குழந்தைத் திருமணம் பழக்கத்தில் இருந்தது.**

இ. தந்தையின் சொத்துக்களை மகன் மரபுரிமையாகப் பெற்றான்.

ஈ. உடன்கட்டை ஏறுதல் தெரியாது.

4. கீழ்க்கண்டவற்றில் எந்த ஏறுவரிசை ரிக்வேத சமூகத்தைப் பொறுத்தமட்டில் சரியானது?

அ) கிராமா< குலா < விஷ் < ராஸ்டிரா < ஜனா

ஆ. **குலா < கிராமா < விஷ் < ஜனா < ராஸ்டிரா**

இ. ராஸ்டிரா < ஜனா < கிராமா < குலா < விஷ்

ஈ. ஜனா <கிராமா < குலா < ஜனா < ராஸ்டிரா

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வேதப்பண்பாடு ________ இயல்பைக் கொண்டிருந்தது.

**விடை: ரத்த உறவு**

2. வேதகாலத்தில் மக்களிடமிருந்து ________ என்ற வரி வசூலிக்கப்பட்டது.

**விடை: பாலி**

3. ________ முறையானது பண்டைய கால கல்வி கற்கும் முறையாகும்.

**விடை: குருகுலக் கல்வி**

4. ஆதிச்சநல்லூர் ________ மாவட்டத்தில் அமைந்துள்ளது.

winmeen.com

**விடை: தூத்துக்குடி**

**IV. சரியா? தவறா?**

1. பல இடங்களில் கிடைத்துள்ள ரோமானியத் தொல் பொருட்கள் இந்திய-ரோமானிய வணிக உறவுகளுக்குச் சான்றுகளாய் உள்ளன. **சரி**

2. நடுகல் என்பது மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய ஒரு வீரனின் நினைவாக நடப்படுவதாகும். **சரி**

3. படைத்தளபதி 'கிராமணி' என அழைக்கப்பட்டார். **தவறு**

4. கருப்பு மற்றும் சிகப்பு மட்பாண்டங்கள் பெருங்காலத்தின் சிறப்பியல்புகள் ஆகும். **சரி**

5. பையம்பள்ளியில் இரும்பு உருக்கப்பட்டத்றகான சான்றுகள் கிடைத்துள்ளன. **சரி**

**V. பொருத்துக.**

அ) கீழடி - 1. பகடை

ஆ) பொருந்தல் - 2. கொழு முனைகள்

இ) கொடுமணல் - 3. சுழல் அச்சுக்கள்

ஈ) ஆதிச்சநல்லூர் - 4. தங்க ஆபரணங்கள்

அ) 4 3 2 1 ஆ. 3 4 1 2 இ. 1 3 4 2 **ஈ. 1 2 3 4**

**VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளி.**

**1. நான்கு வேதங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

ரிக் வேதம், யஜூர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம்

**2. வேதகால மக்களால் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகள் யாவை?**

குதிரைகள், பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள், காளைகள், நாய்கள்வீட்டு விலங்குகளாகப் பழக்கப்படுத்தப்பட்டன.

பின்வேத காலத்தில் ஆரியர்கள் பசு, வெள்ளாடு, செம்மறியாடு, குதிரை மட்டுமல்லாமல் யானைகளையும் பழக்கப்படுத்தினர்.

**3. 'பெருங்கற்காலம்' பற்றி நீங்கள் அறிந்தது என்ன?**

பெருங்கற்காலம் ஆங்கிலத்தில் Megalithic Age என்று அழைக்கப்படுகிறது. Megalith என்பது கிரேக்கச் சொல்லாகும். 'Mega' என்றால் பெரிய, 'lith' என்றால் 'கல்' என்று பொருள். இறந்தவர்களைப் புதைத்த இடங்களைக் கற்பலகைகளைக் கொண்டு மூடியதால் இக்காலம் பெருங்கற்காலம் என அழைக்கப்படுகிறது.

**4. 'கற்திட்டைகள்' என்பது என்ன?**

இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் இருபுறமும் இரண்டு கற்பலகைகள் செங்குத்தாக நடப்பட்டு அவற்றின் மீது மற்றொரு கற்பலகை படுக்கை வசத்தில் வைக்கப்படும். இவை 'கற்திட்டைகள்' எனப்படுகின்றன.

**5. முதுமக்கள் தாழிகள் என்றால் என்ன?**

முதுமக்கள் தாழிகள் என்பன இறந்தவர்களைப் புதைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பெரிய மண்பானைகள் ஆகும்.

**6. வேதகாலத்தில் வணிகப் பரிமாற்றத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்களின் பெயர்களைக் கூறுக.**

வேதகாலத்தில் நிஷ்கா, சத்மனா என்னும் தங்க நாணயங்களையும், கிருஷ்ணாலா என்னும் வெள்ளி நாணயங்களையும் வணிகத்தில் பயன்படுத்தினர்.

**7. தமிழ்நாட்டில் காணப்படும் பெருங்கற்கால நினைவுச் சின்னங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

முதுமக்கள் தாழிகள், கற்திட்டைகள், நினைவுக் கற்கள், நடுக்கற்கள் ஆகியவை தமிழ்நாட்டில் காணப்படும் பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் ஆகும்.

**8. கொடுமணலிலுள்ள தொல்லியல் ஆய்விடம் குறித்து எழுதுக.**

பதிற்றுப்பகத்தில் இடம் பெற்றுள்ள கொடுமணல் என்னும் ஊர் இதுவே என அடையாளப்படுத்தப்படுகிறது. இங்கு தமிழ் பிராமி எழுத்துக்களைக் கொண்ட முந்நூற்றுகும் அதிகமான மண்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் நூல் சுற்றி வைக்கப் பயன்படும் சுழல் அச்சுக்கள், சுருள்கள், துணிகளின் சிறிய துண்டுகள், கருவிகள், ஆயுதங்கள், அணிகலன்கள், மணிகள் முக்கியமாக சிவப்பு நிற மணிக்கற்கள் ஆகிவற்றையும் தொல்லியல் ஆய்வு அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். புதைகுழி மேட்டிற்கு அருகே காணப்பட்ட நினைவுக்கல் (Menhir) பெருங்காலத்தைச் சேர்ந்தது என்று கணிகப்பட்டுள்ளது.

**9. வேதகாலப் பெண்கள் குறித்து எழுதுக.**

ரிக்வேதகால சமூகத்தில் பெண்கள் ஓரளவிற்கு சுதந்திரம் பெற்றிருந்தனர். மனைவி குடும்பத்தின் தலைவியாக மதிக்கப்பட்டார். பெண்கள் தனது கணவருடன் தமது வீட்டில் சடங்குகள் நடத்தினர். குழந்தைத் திருமணத்தையும், உடன்கட்டை ஏறுதலையும் அறிந்திருக்கவில்லை. கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ளத் தடைகள் இல்லை. இருந்தபோதிலும் பெற்றோரிடமிருந்து சொத்துக்களைப் பெறும் சொத்துரிமை பெண்களுக்கு மறுக்கப்பட்டது. பொது நிகழ்ச்சிகளில் பெண்கள் எந்தப் பங்கும் வகிக்கவில்லை. பின்வேதகாலத்தில் சமூகத்தில் மட்டுமின்றி, குடும்பத்திலும் கூட பெண்களின் பங்கும் அவர்களுக்கான நிலையும் குறைந்துபோனது. பெண்கள் குடும்பத்தில் சடங்குகளை நடத்த முடியாத நிலை உருவானது. திருமணம் தொடர்பான விதிகள் இறுக்கமும் குழப்பமும் பெற்றன. பலதார மணம் சாதாரணமாக நடைபெற்றது. கைம்பெண் மறுமணத்திற்கு ஊக்கம் அளிக்கப்படவில்லை. பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. சாதிகளுக்கு இடையிலான திருமணம் நிராகரிக்கப்பட்டது.

## 2. மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும்

கி.மு ஆறாம் நூற்றாண்டு இந்தியாவின் அறிவு மற்றும் ஆன்மீக வளர்ச்சியின் அடையாளச் சின்னம் ஆகும். வீல் டூராண்ட் என்ற வரலாற்று அறிஞர் இக்காலத்தை 'நட்சத்திரங்களின் மழை' என வர்ணிக்கிறார். இக்காலத்தில் தான் **அங்கங்கள்** என்ற சமண நூல்களும், **திரிபிடகங்கள்** என்ற பௌத்த நூலும் தோன்றின. இதுவரை மதத்தின் பெயரால் சிக்கலான சங்குகளும், பொருள் செலவும், மூட நம்பிக்கைகளும், சாதி முரைகளும், பாலியல் பாகுபாடுகளும் மலிந்து காணப்பட்டன. இவற்றிற்கு எதிராக இக்காலத்தால் புதிய அறிவு மலர்ச்சி ஏற்பட்டது. இதுவே சமண மதம் தோன்றக் காரணமாய் அமைந்தது.

சமண மதத்தில் 24 தீர்த்தங்காரர்கள் சமணமத உண்மைகளைப் போதித்து வந்தனர். முதல் தீர்த்தங்கரர் ரிஷபர் ஆவார். கடைசித் தீர்த்தங்கரர் மகாவீரர் ஆவார். இவரது வழிகாட்டுதலில் சமணம் முக்கியத்துவம் பெற்றது. வர்த்தமானர் ஒர் இளவரசர் ஆவார். தனது 30 ஆவது வயதில் துறவறம் மேற்கொண்டு ஜினா ஆனார். இவரைப் பின்பற்றியவர்கள் சமணர்கள் என அழைக்கப்பட்டனர். சமணம் கடவுள் கொள்கையை மறுக்கிறது. அகிம்சையே சமணத்தின் அடிப்படையாகும். மறுபிறப்பிலிருந்து விடுபடுவதே சமணத்தினிலக்கு ஆகும். ஒருவருடைய வாழ்வின் நலன் என்பது கர்மவினையால் தீர்மானிக்கப்படுகிறது என்பதை சமணம் வலியுறுத்தியது.

கர்மாவிலிருந்து விடுபட மகாவீரர் **திரிரத்தினங்கள்** எனப்படும் மூன்று வழிகளைக் கற்பித்தார். அவை 1) நன்னம்பிக்கை 2) நல்லறிவு 3) நற்செயல். ஒழுக்கமான வாழ்க்கை வாழ மகாவீரர் ஐந்து

கொள்கைகளைப் போதித்தார். அவை 1) அகிம்சை 2) சத்யா 3) அஸ்தேயா (திருடாமை) 4) அபரிக்கிரகா (பணம், சொத்து மீது ஆசை கொள்ளாதிருத்தல்) 5) பிரம்மச்சரியா (திருமணம் செய்து கொள்ளாமை). சமணம் திகம்பரர், சுவேதாம்பரர் என இரு பிரிவுகளாக பிரிந்தது. திகம்பரர் வைதீக பழமை வாதப் போக்குடையவர்கள். இந்தத் துறவிகள் ஆடை அணிவதில்லை. சுவேதாம்பரர் முற்போக்கானவர்கள். வெள்ளை நிற ஆடை அணிவர். பிச்சைப் பாத்திரம், புத்தகம் ஆகியவற்றை இவர்கள் வைத்துக் கொள்ளலாம்.

சமணக் கருத்துகள் மக்கள் மொழியிலேயே கூறப்பட்டன. இதன் போதனைகள் எளிமையானவை. இதற்கு வணிகர்கள், அரசர்களின் ஆதரவு இருந்தது. எனவே இந்தியாவில் சமணம் எளிதில் பரவ ஆரம்பித்தது. கீழக்குயில்குடி கிராமத்தில் (மதுரையிலிருந்து 15 கி.மீ. தொலைவில்) சமணர்மலை என்ற குன்று உள்ளது. அரிட்டாபட்டி கிராமத்தில், கலிஞ்சமலை பகுதியில் பாண்டவர் படுக்கை எனப்படும் சமணர் குகைகள் உள்ளன. மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் சமண மதக் குறிப்புகள் காணப்படுகின்றன. புகார், துறையும், வஞ்சி, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் சமண மடாலயங்கள் இருந்துள்ளன. காஞ்சிபுரத்திலுள்ள திருப்பருத்திகுன்றத்தில் உள்ள ஜைனக் காஞ்சி என்ற கிராமத்தில் சமணக் கோவில்கள் உள்ளன.

பௌத்த மதத்தை நிறுவியவர் கௌதம புத்தர் ஆவார். இவரது இயற்பெயர் சித்தார்த்தர். அரச குடும்பத்தைச் சேர்ந்த சித்தார்த்தர் தனது 29ஆம் வயதில் அரண்மனையை விட்டு வெளியேறி துறவறம் மேற்கொண்டார். கயாவுக்கு அருகேயுள்ள ஓர் அரசமரத்தடியில் இவர் ஞானம் பெற்றார். அப்போதிலிருந்து அவர் புத்தர் (ஞானம்பெற்றவர்) என அழைக்கப்பட்டார். இவர் சாக்கியமுனி என்றும் அழைக்கப்பட்டார். சாரநாத்தில் உள்ள மான்கள் பூங்காவில் தனது முதல் போதனையை நிகழ்த்தினார். இது தர்மசக்ர பரிவர்த்தனா என அழைக்கப்படுகிறது.

வாழ்க்கை துன்பங்கள் நிறைந்தது. ஆசையே துன்பத்திற்குக் காரணம். ஆசையைத் துறந்துவிட்டால் துயரங்களைப் போக்கி விடலாம். சரியான பாதைகளைப் பின்பற்றினால் ஆசைகளை வென்று விடலாம். இவையே புத்தர்கண்டறிந்த நான்கு பேருண்மைகள். புத்தரின் எண் வகை வழிகள் என்பன: 1. நல்ல நம்பிக்கை, 2. நல்ல எண்ணம், 3. நல்ல செயல், 4. நல்ல பேச்சு, 5. நல்ல வாழ்க்கை, 6. நல்ல முயற்சி, 7. நல்ல அறிவு, 8. நல்ல தியானம். புத்தரின் போதனைகள் தம்மா என்று குறிப்பிடப்படுகின்றன. புத்தர் அகிம்சையை வலியுறுத்தினார். கர்மா கோட்பாட்டை பௌத்தம் ஏற்றுக்கொண்டது.

புத்தர் தனது கருத்துக்களைப் பரப்ப சங்கம் ஒன்றை நிறுவினார். சைத்தியம் என்பது பௌத்தக் கோவிலைக் குறிக்கும். துறவிகள் வாழும் இடங்கள், மடாலயங்கள் ஆகியவை விகாரைகள் எனப்பட்டன. புத்தரின் உடல் உறுப்புகளின் எஞ்சிய பாகங்கள் மீது கட்டப்பட்டுள்ள கட்டம் ஸ்தூபி எனப்படுகிறது.

பௌத்த மதம் ஹீனாயனம், மகாயானம் என்ற இரு பிரிவுகளாகப் பிரிந்தது. ஹீனாயனப் பிரிவினர் மிக எளிமையானவர்கள். புத்தரின் சிலைகளையோ மடங்களையோ இவர்கள் சமஸ்கிருத மொழியைப் பயன்படுத்தினர். விரிவான சடங்குகளைப் பின்பற்றினார்.

சமண மதம் தீவிரமான துறவறத்தைப் பின்பற்றியது. இது இந்தியாவில் மட்டுமே இருந்தது. பௌத்த மதம் இடைப்பட்ட வழியைப் பின்பற்றியது. உலகின் பல பகுதிகளிலும் இது பரவியது. கடவுள் இருப்பதை சமண மதம் நம்பவில்லை. பௌத்த மதம் அனாத்மா, அனித்யா ஆகிய கருத்துகளை வலியுறுத்தியது. இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை பௌத்த இலக்கியமாகும். காஞ்சிபுரம் ஒரு புகழ்பெற்ற பௌத்த மையமாகும். இங்கு வருகை புரிந்த சீனாப் பயணி யுவான் சுவாங் அசோகரால் கட்டப்பட்ட 100 அடி உயரமுள்ள ஸ்தூபியைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. பௌத்த நூல்களின் பெயர் என்ன?

அ. அங்கங்கள் **ஆ. திரிபிடகங்கள்** இ. திருக்குறள் ஈ. நாலடியார்

2. சமணத்தின் முதல் தீர்த்தங்காரர் யார்?

**அ) ரிஷபா** ஆ. பார்சவ இ. வர்தமான ஈ. புத்தர்

3.சமணத்தில் எத்தனை தீர்த்தங்கரர்கள் இருந்தனர்?

அ. 23 **ஆ. 24** இ. 25 ஈ. 26

4. மூன்றாம் பௌத்தசபை எங்கு கட்டப்பட்டது?

அ. ராஜகிரகம் ஆ. வைசாலி

**இ. பாடலிபுத்திரம்** ஈ. காஷ்மீர்

5. புத்தர் தனது முதல் போதனை உரையை எங்கு நிகழ்த்தினார்?

அ. லும்பினி **ஆ. சாரநாத்**

இ. தட்சசீலம் ஈ. புத்தகயா

**II. கூற்றோடு காரணத்தைப் பொருத்துக / பொருத்தமான விடையை தேர்ந்தெடு.**

1. **கூற்று:** ஒரு சாதாரண மனிதரால் உபநிடதங்களைப் புரிந்து கொள்ள இயலாது.

**காரணம்:** உபநிடதங்கள் மிகவும் தத்துவம் சார்ந்தவை.

**அ) கூற்றும் அதன் காரணமும் சரியானவை**

ஆ. கூற்று தவறானது.

இ. கூற்று சரியானது; ஆனால் அதற்கான காரணம் தவறானது.

ஈ. கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.

2. **கூற்று:** ஜாதகங்கள் புகழ் பெற்ற கதைகளாகும்.

**காரணம்** : அஜந்தா குகையின் சுவர்களிலும் மேற்கூரையிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் ஜாதகக் கதைகளைச் சித்தரிக்கின்றன.

அ) **கூற்றும் அதற்கான காரணமும் சரி**

ஆ) கூற்று தவறு.

இ. கூற்று சரி: ஆனால் அதற்கான காரணம் தவறு.

ஈ. கூற்றும் அதற்கான காரணம் ஆகிய இரண்டும் தவறு.

**3. சரியான விடையைக் கண்டறியவும்.**

விகாரைகள் எதற்காகப் பயன்படுத்தப்பட்டன?

1. கல்விக் கூடமாக

2. பௌத்தத் துறவிகளின் தங்குமிடம்

3. புனிதப் பயணிகள் தங்குவதற்காக

4. வழிபாட்டுக் கூடம்

**அ. 2 சரி** ஆ. 1 மற்றும் 3 சரி

இ. 1, 2, 4 ஆகியவை சரி ஈ. 1 மற்றும் 4 சரி

**4. சமணமும் பௌத்தமும் உருவாவதற்கு கீழ்க்கண்ட கூற்றுகளைக் காரணமாகக் கருதலாமா?**

1. வேள்விச் சடங்குகள் பெருஞ்செலவு மிக்கதாக இருந்தன.

2. மூடநம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் சாதாரண மனிதர்களைக் குழப்பமுறச் செய்தன.

மேற்சொல்லப்பட்ட கூற்றில் / கூற்றுகளில் எது/ எவை சரியானது/ சரியானவை.

அ. 1 மட்டும் ஆ. 2 மட்டும் **இ. 1 மற்றும் 2** ஈ. 1 மற்றும் 2ம் இல்லை

5. சமணம் குறித்த கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது?

அ. உலகைக் கடவுள் தோற்றுவித்தார் என்பதை சமணம் மறுக்கிறது.

**ஆ. உலகைத் தோற்றுவித்தவர் கடவுள் என்பதை சமணம் ஒத்துக் கொள்கிறது.**

இ. சமணத்தின் அடிப்படைத் தத்துவம் சிலைவழிபாடாகும்.

ஈ. இறுதித்தீர்ப்பு எனும் நம்பிக்கையைச் சமணம் ஒத்துக் கொள்கிறது.

6. பொருந்தாததை வட்டமிடு.

பார்சவா, மகாவீரர், புத்தர், ரிஷபர்

**விடை: புத்தர்**

7. தவறான இணையைக் கண்டுபிடி.

அ. அகிம்சை - காயப்படுத்தாமல் இருத்தல்

ஆ. சத்யா - உண்மை பேசுதல்

இ. அஸ்தேய - திருடாமை

**ஈ. பிரம்மச்சரியா - திருமண நிலை**

8. சித்தார்த்த கௌதமர் குறித்து கீழே காண்பனவற்றுள் ஒன்றைத்தவிர மற்ற அனைத்தும் சரி.

அ) **இந்து மதத்தை நிறுவியவர் அவரே.**

ஆ. அவர் நேபாளத்தில் பிறந்தார்.

இ. அவர் நிர்வாணம் அடைந்தார்.

ஈ. அவர் சாக்கியமுனி என்று அறியப்பட்டார்.

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மகாவீரரின் கோட்பாடு _______ என்று அழைக்கப்படுகிறது.

**விடை: திரி ரத்தினங்கள்**

2. ______ என்பது துன்பங்களிலிருந்தும் மறுபிறவியிலிருந்தும் விடுதலை பெற்ற ஒரு நிலை.

**விடை: நிர்வாண நிலை**

3. பௌத்தத்தை நிறுவியவர் _________ ஆவார்.

**விடை: கௌதம புத்தர்**

4. காஞ்சிபுரத்திலுள்ள, திருப்பத்திக்குன்றம் என்னும் கிராமம் ஒரு காலத்தில் ______ என்று அழைக்கப்பட்டது.

**விடை: ஜைனக் காஞ்சி**

5. _______ என்பது புத்தரின் உடல் எச்சங்கள் மீது கட்டப்பட்டனவாகும்.

**விடை: ஸ்தூபி**

**IV. சரியா? தவறா?**

1. புத்தர் கர்மாவை நம்பினார். **சரி**

2. புத்தருக்குச் சாதிமுறை மேல் நம்பிக்கை இருந்தது. **தவறு**

3. கௌதம சுவாமி, மகாவீரரின் போதனைகளைத் தொகுத்தார். **சரி**

4. விகாரைகள் என்பன கோவில்களாகும். **தவறு**

5. அசோகர் பௌத்த மதத்தைப் பின்பற்றினார். **சரி**

**V. பொருத்துக.**

1. அங்கங்கள் - வர்தமானா

2. மகாவீரர் - துறவிகள்

3. புத்தர் - பௌத்தக் கோவில்கள்

4. சைத்யா - சாக்கியமுனி

5. பிட்சுக்கள் - சமண நூல்

**விடை:**

1. அங்கங்கள் - சமண நூல்

2. மகாவீரர் - வர்தமானா

3. புத்தர் - சாக்கியமுனி

4. சைத்யா - பௌத்தக் கோவில்கள்

5. பிட்சுக்கள் - துறவிகள்

**VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

**1. சமணத்தின் மூன்று ரத்தினங்கள் எவை?**

நன்னம்பிக்கை, நல்லறிவு, நற்செயல்

**2. பௌத்தத்தின் இருபிரிவுகள் எவை?**

ஹுனாயனம், மகாயானம்.

**3. 'ஜினா' என்பதின் பொருள் என்ன?**

'ஜினா' என்பதன் பொருள் தன்னையும், வெளியுலகத்தையும் வெல்வது என்பதாகும்.

**4. பௌத்தத்திற்கும் சமணத்திற்கும் உள்ள இரண்டு பொதுவான கூறுகளை எழுதுக.**

மகாவீரர், புத்தர் இருவருமே அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இருந்தபோதிலும் அவர்கள் அரச குடும்ப உரிமைகளை நிராகரித்து, துறவு வாழ்க்கையைத் தேர்வு செய்தனர். சமணமும் பௌத்தமும் வேதங்களின் ஆதிக்கத்தை மறுத்தன.

மக்கள் பேசிய மொழிகளில் இருமதங்களும் போதிக்கப்பட்டன.

**5. பௌத்த சங்கத்தைப் பற்றி குறிப்பெழுதுக.**

புத்தர் தனது கருத்துக்களைப் பரப்புவதற்காக சங்கம் ஒன்றை நிறுவினார். அதில் உறுப்பினர்களாக இருந்த துறவிகள் 'பிட்சுக்கள்' என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் மிக எளிய வாழ்க்கையை மேற்கொண்டனர்.

**6. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்திற்கு வருகை தந்த வருகை தந்த சீனப் பயணியின் பெயரைக் குறிப்பிடுக.**

கி.பி. (பொ.ஆ.) ஏழாம் நூற்றாண்டில் யுவான் சுவாங் என்ற சீனப் பயணி காஞ்சிபுரத்திற்கு வருகை தந்தார்.

**7. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பெண் ஜைனத் துறவியின் பெயர் என்ன?**

சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள சமண பெண் துறவி கவுந்தியடிகள் ஆவார்.

**8. பௌத்தத்தின் எட்டு நெறிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

1. நல்ல நம்பிக்கை, 2. நல்ல எண்ணம், 3. நல்ல பேச்சு, 4. நல்ல செயல், 5. நல்ல வாழ்க்கை, 6. நல்ல முயற்சி, 7. நல்ல அறிவு, 8. நல்ல தியானம்

**9. சமணத்தின் முக்கியமான ஐந்து நடத்தை விதிகள் எவை?**

அகிம்சை - எந்த உயிரினத்தையும் துன்புறுத்தாமல் இருப்பது,

சத்யா - உண்மையை மட்டுமே பேசுதல்

அஸ்தேய - திருடாமை

அபரிக்கிரகா - பணம், பொருள் சொத்துக்கள் மீது ஆசை கொள்ளலாமல் இருப்பது.

பிரம்மச்சரியா - திருமணம் செய்து கொள்ளாமை

**10. பௌத்தத்தின் நான்கு பேருண்மைகளை எடுத்துரைக்கவும்.**

1. வாழ்க்கை துன்பங்கள், துயரங்கள், நிறைந்தது
2. ஆசையே துன்பங்களுக்கான காரணம்

3. ஆசையைத் துறந்துவிட்டால் துன்ப துயரங்களைப் போக்கி விடலாம்
4. சரியான பாதையைப் பின்பற்றினால் (எண்வகை வழிகள்) ஆசைகளை வென்று விடலாம்.

**11. பௌத்தத்தின் பிரிவுகளான ஹீனயான, மகாயான பிரிவுகளிடையே உள்ள ஏதேனும் மூன்று வேறுபாடுகளை எழுதவும்.**

| ஹீனயானம் | மகாயானம் |
|---|---|
| புத்தரின் சிலைகளையோ உருவப் படங்களையோ வணங்க மாட்டார்கள் | புத்தரின் உருவங்களை வணங்கினர். |
| மிக எளிமையாக இருப்பர் | விரிவான சடங்குகளைப் பின்பற்றினர். |
| தனிமனிதர்கள் முக்தி அடைவதே தங்களின் நோக்கம் என்று நம்பினர். | அனைத்து உயிரினங்களும் முக்தி பெறுவதே தங்களது நோக்கம் என நம்பினர். |

**12. சங்ககாலத்தில் பௌத்தமும் சமணமும் செழித்தோங்கின. ஒவ்வொன்றுக்கும் ஏதாவது இரண்டு சான்றுகளைத் தருக.**

சமணத்திற்கு மிகவும் பிற்பட்டே தமிழகத்தில் பௌத்தம் பரவியது. சங்க காலத்திற்குப் பின்னர் இயற்றப்பட்ட இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை பௌத்த இலக்கியமாகும். மணிமேகலையில் காஞ்சிபுரம் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் புகழ் பெற்ற ஒரு பௌத்த மையமாகும்.

பண்டையத் தமிழ் இலக்கியங்கள் ஜைனம் என்பதை சமணம் என்று குறிப்பிடுகின்றன. அறவோர் பள்ளியில் சமணத் துறவிகள் வாழ்ந்ததாக மணிமேகலையில் குறிப்பு உள்ளது. மதுரைக்கு அருகில் உள்ள கீழக்குடியில் கிராமத்தில் சமணர் மலை என்ற ஒரு குன்று உள்ளது.

## 3. குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை

மக்கள் குழுவாகக் குடியேறிய தொடக்க கால இடங்கள் ஜனபதங்கள் எனப்பட்டன. இரும்பின் பயன்பட்டால் இவை வளர்ச்சியடைந்து மகாஜனபதங்களாக மாறின. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் சிந்து கங்கைச் சமவெளியில் பதினாறு மகாஜனபதங்கள் இருந்தன. இவற்றில் மகதம், அவந்தி, கோசலம், வத்சம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இந்த நான்கு மகஜனபதங்களில் மகதம் ஒரு பேரரசாக உருவானது. மகதம் கங்கைச் சமவெளியின் கீழ்ப்பகுதியில் இருந்தததால் அதிக வேளாண் விளைச்சலைக் கண்டது.

இங்குள்ள காடுகளும், இரும்பு வளங்களும் மகதத்தின் வளர்ச்சிக்குத் துணை புரிந்தன. நகரமயமாதல் ஏற்பட்டு மகதம் பேரரசாக எழுச்சி பெற்றது.

மகதத்தின் முதல் அரச வம்சம் ஹரியங்கா வம்சம் ஆகும். இது பிம்பிசாரர் காலத்தில் தொடங்கியது. அவரது மகன் அஜாதசத்ரு ராஜகிரகத்தில் முதல் பௌத்தசபை மாநாட்டைக் கூட்டினார். இதற்கு அடுத்ததாக சிசுநாக வம்சத்தைச் சேர்ந்த காலசோகா தலைநகரை ராஜகிரகத்திலிருந்து பாடலிபுத்திரத்திற்கு மாற்றினார். இவர் இரண்டாம் பௌத்த மாநாட்டை வைசாலியில் கூட்டினார். மகாபத்ம நந்தர் அடுத்து வந்த வம்சத்தின் முதல் அரசர் ஆவார். இந்த வம்சத்தின் கடைசி அரசர் தனநந்தர் ஆவார்.

மௌரியப் பேரரசு சந்திரகுப்த மௌரியரால் மகதத்தில் நிறுவப்பட்டது. பத்ரபாகு எனும் சமணத்துறவி சந்திரகுப்தரை தென்னிந்தியாவிற்கு அழைத்துச் சென்றார். சந்திரகுப்தரின் மகன் பிந்துசாரர் ஆவார். இவருக்கு அமிர்தகதா என்ற பெயரும் உண்டு. இதன் பொருள் ‘எதிரிகளை அழிப்பவன்’ என்பதாகும். பிந்துசாரருக்குப் பின் அவரது மகன் அசோகர் மகதத்தின் அரசரானர். இவரே மௌரிய அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர் ஆவர். அவர் ‘தேவனாம்பிரியர்’, என்று அழைக்கப்படார். இதன் பொருள் ‘கடவுளுக்குப் பிரியமானவன்’ என்பதாகும்.

அசோகர் கி.மு. 261 ல் கலிங்கத்தின் மீது போர் தொடுத்து அதனை வென்றார். போரின் பயங்கரத்தைக் கண்டறிந்த அசோகர் மனமாற்றம் அடைந்து, இனி போர் செய்யக்கூடாது என்ற முடிவிற்கு வந்தார். அசோகர் ஒரு பௌத்தர் ஆனார். தர்மத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்காக அவர் பல்வேறு பகுதிகளுக்கு தர்மயாத்திரைகளை மேற்கொண்டார். அசோகர் கீழ்க்கண்டவறிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். அவையாவன:

- இரக்க உணர்வு
- அறக்கொடை
- தூய்மை
- புனிதத்தன்மை
- காலக்கட்டுப்பாடு
- உண்மையுடைமை
- மூத்தோர்களை மதித்தல்

சாரநாத்தில் அசோகரது தூன் அமைந்துள்ளது. இதன் சிகரப் பகுதியில் உள்ள சிங்க உருவங்கள் இந்திய தேசிய சின்னமாகவும், அடிப்பகுதியில் உள்ள சக்கரம் இந்திய தேசியக் கொடியின் மையச் சக்கரமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அசோகர் தன் மகன் மகிந்தாவையும் மகள் சங்கமித்ராவையும் பௌத்தத்தைப் பரப்புவதற்காக இலங்கைக்கு அனுப்பிவைத்தார். தர்மத்தின் கொள்கைகளைப்

பரப்புவதற்காக சமயப் பரப்பாளர்களை பிற நாடுகளுக்கு அனுப்பி வைத்தார். தர்ம-மகாமாத்திரர்கள் என்னும் புதிய அதிகாரிகள் பௌத்த மதத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டனர். அசோகர் தனது தலைநகரான பாடலிபுத்திரத்தில் மூன்றாம் பௌத்த மாநாட்டைக் கூட்டினார்.

அசோகர் 33ஆணைகளை வெளியிட்டார். இப்பேராணைகள் தூண்களிலும், பாறைச் சுவர்களிலும், குகைச் சுவர்களிலும் பொறிக்கப்பட்டன. அவை அமைதி, நேர்மை, நீதி ஆகியவற்றின் மீது அசோகர் கொண்டிருந்த நம்பிக்கையும், மக்களின் நலன்மீது அவர் கொண்டிருந்த அக்கறையையும் வெளிப்படுத்துகின்றன. அசோகருடைய இரண்டு மற்றும் பதிமூன்றாம் பாறைக் கல்வெட்டுகள் பாண்டியர், சோழர், கேரள புத்திரர் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. அசோகரது நிர்வாகம் மையப்படுத்தப்பட்டதாக இருந்தது. 'மந்திரி பரிஷத்' எனும் அமைச்சரவை அரசருக்கு உதவியது.

அசோகரது காலத்தில் பாலி, பாகா என்ற இரண்டு வரிகள் வசூலிக்கப்பட்டன. மொத்த விளைச்சலில் 1/6 பங்கு (பாகா) நிலவரியாக வசூலிக்கப்பட்டது. அரசரே நீதித்துறையின் தலைவராக இருந்தார். அவரே படைகளின் தலைமைத் தளபதியாகவும் இருந்தார். நகர் நிர்வாகம் நகரிகா என்னும் அதிகாரியின் கீழ் இருந்தது. ஸ்தானிகா, கோபா என்ற அதிகாரிகள் அவருக்கு உதவி செய்தனர்.

அரசாங்க ஊழியர்களுக்கு ஊதியம் பணமாக வழங்கப்பட்டது. வெள்ளி நாணயங்களும், 'மாஸாகாஸ்' என்ற செப்பு நாணயங்களும் அரசின் நாணயங்களாக பயன்படுத்தப்பட்டன. வணிகம் செழிப்புற்றது. தமிழகத்தில் மதுரை போன்ற இடங்களில் சிறப்பு மிக்க துணிகள் உற்பத்தி செய்யப்பட்டதாக அர்த்தசாஸ்திரம் குறிப்பிடுகிறது. புத்த கயாவுக்கு வடபுறம் பல குகைகள் உள்ளன. பராபர் குன்றிலுள்ள மூன்று குகைகளில் அசோகரது அர்ப்பணிப்பு கல்வெட்டுகள் உள்ளன.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

1. நான்கு மகாஜனபதங்களில் மிகவும் வலிமையான அரசு எது?

அ. அங்கம் ஆ. **மகதம்** இ. கோசலம் ஈ. வஜ்ஜி

2. கீழ்க்கண்டவர்களில் கௌதம புத்தரின் சமகாலத்தைச் சேர்ந்தவர் யார்?

**அ. அஜாதசத்ரு** ஆ. பிந்து சாரா இ. பத்மநாப நந்தா ஈ. பிரிகத்ரதா

3. கீழ்க்காண்பாவற்றில் எது மௌரியர் காலத்திற்கான சான்றுகளாகும்?

அ. அர்த்த சாஸ்திரம் ஆ. இண்டிகா

இ. முத்ராராட்க்ஷம் **ஈ. இவையனைத்தும்**

4. சந்திரகுப்த மௌரியர் அரியணையைத் துறந்து _______என்னும் சமணத் துறவியோடு சரவணபெலகோலாவுக்குச் சென்றார்.

**அ. பத்ரபாகு** ஆ. ஸ்துலபாகு இ. பார்ஸவநாதா ஈ. ரிஷாநாதா

5. செல்யூகஸ் நிகேட்டரின் தூதுவர் ________

அ. டாலமி ஆ. கௌடில்யர் இ. ஜெர்சக்ஸ் **ஈ. மெகஸ்தனிஸ்**

6. மௌரிய வம்சத்தின் கடைசி அரசர் யார்?

அ. சந்திர குப்த மௌரியர் ஆ. அசோகர்

**இ. பிரிகத்ரதா** ஈ. பிந்துசாரர்

**II. கூற்றைக் காரணத்துடன் ஒப்பிடுக. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

1. **கூற்று:** அசோகர் இந்தியாவின் மாபெரும் பேரரசர் என கருதப்படுகிறார்.

**காரணம்:** தர்மத்தின் கொள்கையின்படி, அவர் ஆட்சி புரிந்தார்.

அ) **கூற்று காரணம் ஆகிய இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.**

ஆ) கூற்றும் காரணமும் உண்மையானவை, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று சரி; ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறு; ஆனால் காரணம் சரி

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது/எவை சரி.

**கூற்று 1:** ஒட்டுமொத்த இந்தியாவை ஒரே ஆட்சியின் கீழ் இணைந்த முதல் அரசர் சந்திரகுப்த மௌரியர் ஆவார்.

**கூற்று 2:** மௌரியரின் நிர்வாகம் பற்றிய செய்திகளை அர்த்தசாஸ்திரம் வழங்குகிறது.

அ) 1 மட்டும் ஆ. **2 மட்டும்**

இ) 1,2 ஆகிய இரண்டும் ஈ. 1ம் இல்லை 2ம் இல்லை

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளைக் கவனமாக கவனி. அக்கூற்றுகளில் சரியானது எது/எவை எனக் கண்டுபிடி.

1. மகத்தின் முதல் அரசர் சந்திரகுப்தர் மௌரியர்

2. ராஜகிரிகம் மகதத்தின் தலைநகராய் இருந்தது.

அ. 1 மட்டும் **ஆ. 2 மட்டும்**

இ. 1 மற்றும் 2 ஈ. 1 ம் இல்லை 2ம் இல்லை

4. கீழ்க்காண்பனவற்றைக் காலக்கோட்டின்படி வரிசைப்படுத்தவும்.

| | | | |
|---|---|---|---|
| அ. நந்தா | சிசுநாகா | ஹரியங்கா | மௌரியா |
| ஆ. நந்தா | சிசுநாகா | மௌரியா | ஹரியங்கா |
| **இ. ஹரியங்கா** | **சிசுநாகா** | **நந்தா** | **மௌரியா** |
| ஈ. சிசுநாகா | மௌரியா | நந்தா | ஹரியங்கா |

5. கீழ்க்கண்டவற்றில் எது மகதப் பேரரசின் எழுச்சிக்குக் காரணமாயிற்று.

1. முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம்

2. அடர்ந்த காடுகள் மரங்களையும், யானைகளையும் வழங்கின.

3. கடலின் மீதான ஆதிக்கம்

4. வளமான இரும்புத் தாது கிடைத்தமையால்

அ. 1,2 மற்றும் 3 மட்டும் ஆ. 3 மற்றும் 4 மட்டும்

**இ. 1,2 மற்றும் 4 மட்டும்** ஈ. இவையனைத்தும்

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ____________ மகதத்தின் தொடக்ககாலத் தலைநகராக இருந்தது.

**விடை: ராஜகிரகம்**

winmeen.com

2. முத்ராட்சசத்தை எழுதியவர் _______

**விடை: விசாகதத்தர்**

3. __________ பிந்துசாரரின் மகனாவார்.

**விடை: அசோகர்**

4. மௌரியப் பேரரசை தோற்றுவித்தவர் __________

**விடை: சந்திரகுப்த மௌரியர்**

5. நாடு முழுவதிலும் தர்மத்தைப் பரப்புவதற்காக ___________பணியமர்த்தப்பட்டனர்.

**விடை: தர்ம மகாமாத்திரர்கள்**

6. மகதத்தை ஆண்ட முதல் அரச வம்சம் ______

**விடை: ஹரியங்கா**

7. _________ பேரரசு இந்தியாவின் முதல் பெரிய பேரரசாகும்.

**விடை: மௌரிய**

8. _________ புதிய தலைநகரான பாடலிபுத்திரத்திற்கு அடித்தளமிட்டார்.

**விடை: உதயன்**

9. ________ ஒரு முக்கியமான ஏற்றுமதிப் பொருள்.

**விடை: நறுமணப்பொருள்**

10. பண்டைய மகத நாட்டில் இருந்த மடாலயம் பின்னர் புகழ்பெற்ற கல்வி நிலையமாக திகழ்ந்தது __________

**விடை: நளந்தா**

11. நிலவரி _______

**விடை: பகா**

12. கலிங்கப் போரின் பயங்கரம் ______ பொறிக்கப்பட்டுள்ளது.

**விடை: பாறைக் கல்வெட்டு**

13. கிரேக்கர்கள் பிந்துசாரரை _________ என்று அழைத்தனர்.

**விடை: அமிர்தகதா**

14. சாரநாத் தூணின் சிகரப்பகுதியில் அமைந்துள்ளது _______

**விடை: தர்மச்சக்கரம்**

15.அமைச்சரவை _______ என அழைக்கப்பட்டது.

**விடை: மந்திரி பரிஷத்**

**IV. சரியா? தவறா?**

1. தேவனாம்பிர்இயா எனும் பட்டம் சந்திரகுப்த மௌரியருக்கு வழங்கப்பட்டது. **தவறு**

2. அசோகர் கலிங்கப்போரில் தோல்வியடைந்த பின்னர் போரைக் கைவிட்டார். **தவறு**

3. அசோகருடைய தம்மா பௌத்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. **சரி**

4. நமது காகிதப் பணத்தில் இடம் பெற்றுள்ள சிங்கங்கள் ராம்பூர்வா தூண்களின் காளை சிகரப்பகுதியிலிருந்து பெறப்பட்டவையாகும். **தவறு**

5. புத்தரின் உடல் உறுப்புகளின் எச்சங்கள் ஸ்தூபியின் மையத்தில் வைக்கப்பட்டுள்ளன. **சரி**

**V. பொருத்துக.**

| | |
|---|---|
| 1. கணா | 1. அர்த்தசாஸ்திரம் |
| 2. மெகஸ்தனிஸ் | 2. மதச் சுற்றுப்பயணம் |
| 3. சாணக்கியா | 3. மக்கள் |
| 4. தர்மயாத்திரை | 4. இண்டிகா |

**அ. 3 4 1 2** ஆ. 2 4 3 1 இ. 3 1 2 4 ஈ. 2 1 4 3

winmeen.com

**VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

**1. மௌரியர் காலத்திற்கான இரண்டு இலக்கியச் சான்றுகளைக் குறிப்பிடவும்.**

1. மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா 2. சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம்

**2. ஸ்தூபி என்றால் என்ன?**

ஸ்தூபியானது செங்கல் அல்லது கற்களால் கட்டப்பட்டுள்ள அரைக்கோள வடிவமுடைய குவிமாடம் போன்ற அமைப்பாகும். புத்தரின் உடல் உறுப்புகளின் எச்சங்கள் ஸ்தூபியின் மையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

**3. மகத அரச வம்சங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

நான்கு அரச வம்சங்கள் மகதத்தை ஆண்டன. அவையாவன: ஹரியங்கா வம்சம், சிசுநாக வம்சம், நந்த வம்சம், மௌரிய வம்சம்

**4.மௌரியர் காலத்தில் அரசு வருவாய் எவற்றிலிருந்து பெறப்பட்டது?**

நிலங்களே அரசுக்கு வருவாயை ஈட்டித் தந்தது.

மொத்த விளைச்சலில் 1/6 பங்கு (பாகா) நிலவாரியாக வசூல் செய்யப்பட்டது.

காடுகள், சுரங்கங்கள், உப்பு மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வரிகள் அரசுக்கு கூடுதல் வருவாயாக அமைந்தன.

**5. நகரங்களின் நிர்வாகத்தில் 'நகரிகா' வுக்கு உதவியவர் யார்?**

நகர நிர்வாகம் 'நகரிகா' என்னும் அதிகாரியின் கீழிருந்தது, அவருக்கு ஸ்தானிகா, கோபா எனும் அதிகாரிகள் உதவி செய்தனர்.

**6. அசோகரின் இரண்டு மற்றும் பதிமூன்றாம் பாறைப் பேராணைகளிலிருந்து நீங்கள் அறிவதென்ன?**

அசோகருடைய இரண்டு மற்றும் பதிமூன்றாம் பாறைக் கல்வெட்டுகள் மூவேந்தர்களான பாண்டியர், சோழர், கேரளபுத்திரர் ஆகியோரையும் சத்யபுத்திரர்களையும் குறிப்பிடுகின்றன.

**7. மௌரியர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்ற ஒரு தமிழ் நூல் கூறுக?**

மாமூலனாரின் அகநானூற்றுப் பாடல்.

**8. பௌத்தத்தைப் பரப்புவதற்கு அசோகர் என்ன செய்தார்?**

அசோகர் தன்னுடைய மகன் மகிந்தாவையும் மகள் சங்கமித்ராவையும் பௌத்தத்தைப்

பரப்புவதற்காக இலங்கைக்கு அனுப்பி வைத்தார். தர்மத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்காக மேற்கு ஆசியா, எகிப்து, கிழக்கு ஐரோப்பா ஆகிய பகுதிகளுக்கு சமயப்பரப்பாளர்களை அனுப்பி வைத்தார். அசோகர் தர்ம-மகாமாத்திரர்கள் என்னும் புதிய அதிகாரிகளை நியமித்தார். பேரரசு முழுவதிலும் பௌத்தமதத்தைப் பரப்புவதே அவர்களுடைய பணியாகும். அசோகர் தனது தலைநகரான பாடலிபுத்திரத்தில் மூன்றாம் பௌத்தமத மாநாட்டைக் கூட்டினார்.

**9. மகதத்தின் எழுச்சிக்கான காரணங்களில் ஏதாவது மூன்றினை எழுதுக.**

மகதம் கங்கைச் சமவெளியின் கீப்பகுதியில் அமைந்து இருந்தது. வளம் மிகுந்த இந்தச் சமவெளி வேளாண் விளைச்சலை அதிகரித்தது. இது அரசுக்கு நிலையான, கணிசமான வருமானத்தை அளித்தது.

அடர்ந்த காடுகள் கட்டுமானங்களுக்குத் தேவையான மரங்களையும் படைகளுக்குத் தேவையான யானைகளையும் வழங்கின.

அதிக அளவிலான இயற்கை வளங்கள் குறிப்பாக இரும்பு, ஆயுதங்கள் செய்யவும் மேம்படுத்திக் கொள்ளவும் அவர்களுக்கு உதவியது.

## புவியியல்

## 1. வளங்கள்

மனிதனின் தேவையை நிறைவு செய்யும் எந்த ஒரு பொருளும் வளமாகும். எல்லா வளங்களுக்கும் மதிப்பு உண்டு. பெட்ரோலிய, நிலக்கரி போன்றவை பண மதிப்பு கொண்ட வளங்கள் ஆகும். காற்று, சூரிய ஒளி போன்றவை பணமதிப்பற்ற வளங்கள் எனப்படுகின்றன. பொருளாதாரத்தில் பண மதிப்புள்ள வ:அங்களே முக்கிய இடத்தை வகிக்கின்றன.

வளங்கள் மூன்று வகைப்படும். அவையாவன (i) இயற்கை வளங்கள், (ii) மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள், (iii) மனித வளங்கள். இயற்கையிலிருந்து நேரடியாகப் பெறப்படும் அனைத்து வளங்களும் இயற்கை வளங்கள் எனப்படுகின்றன. காற்று, நீர், மண், கனிமங்கள், நம்மைச் சுற்றியுள்ள தாவரங்கள், விலங்குகள் அனைத்தும் இயற்கை வளங்கள் ஆகும். இவற்றில் தாவரங்கள், விலங்குகள்,

நுண்ணுயிர் போன்ற உயிருள்ள அனைத்தும் உயிரியல் வளங்கள் ஆகும். நிலம், நீர், காற்று, கனிமங்கள் போன்ற உயிரில்லாத வளங்கள் உயிரற்ற வளங்கள் எனப்படுகின்றன.

மனிதனின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, இருப்பிடம் ஆகும். இந்தத் தேவைகளை நிறைவேற்ற வேட்டையாடுதல், மீன்பிடித்தல், உணவு சேகரித்தல் போன்ற முதல்நிலை செயல்பாடுகளில் மனிதன் ஈடுபட்டான். பின்னர் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பிற்காக நீர்வளம் உள்ள பகுதிகளை நாடிச் சென்றான். கற்களால் கருவிகளைச் செய்தான். உலோகங்களைக் கண்டறிந்த பின் அவற்றால் கருவிகளையும் அணிகலன்களையும் செய்தான். இவ்வாறு சுரங்கத் தொழில் உருவானது.

வளர்ச்சி நிலையின் அடிப்படையில் வளங்களை கண்டறியப்பட்ட வளங்கள் மற்றும் மறைந்திருக்கும் வளங்கள் என வகைப்படுத்தலாம். கண்டறியப்பட்ட வளங்கள் தற்போது பயன்படுத்தப்படுவதும் மீதம் உள்ள இருப்பும் ஆகும். மறைந்திருக்கும் வளங்கள் என்பன தற்பொழுது அதிகம் பயன்படுத்தப்படாத, இதுவரை கண்டறியாத வளங்கள் ஆகும். கடல் ஈஸ்ட் என்பது மிகவும் பயனுள்ள ஒரு வளமாகும். ஆனால் இதுவரை அதனை முழுமையாகப் பயன்படுத்தக் கூடிய தொழில்நுட்பங்கள் கண்டறியப்படவில்லை.

புதுப்பித்தலின் அடிப்படையில் வளங்களை புதுப்பிக்கக் கூடிய வளங்கள் என்றும் புதுப்பிக்க இயலா வளங்கள் என்றும் வகைப்படுத்தலாம். காற்று, நீர், சூரிய ஒளி போன்றவை கால சுழற்சிக்கு ஏற்ப புதுப்பித்துக் கொள்ளக் கூடிய வளங்கள் ஆகும். ஆனால் இவற்றையும் அறிவு பூர்வமாகப் பயன்படுத்தவேண்டும். நிலக்கரி, இயற்கைவாயு, பெட்ரோலியம் போன்றவை பயன்பாட்டிற்குப் பின்னால் தீர்ந்து போகக் கூடியவை. இவற்றை உடனடியாகப் புதுப்பிக்க இயலாது. எனவே இவற்றை புதுப்பிக்க இயலா வளங்கள் என்று கூறுகிறோம்.

பரவலின் அடிப்படையில் வளங்கள் உள்ளூர் வளங்கள் என்றும் உலகளாவிய வளங்கள் என்றும் பிரிக்கப்படுகின்றன. கனிமங்கள் உலகின் சில பகுதிகளில் மட்டும் காணப்படுகின்றன. இவை உள்ளூர் வளங்கள் எனப்படும். சூரிய ஒளி, காற்று போன்ற வளங்கள் உலகம் முழுவதும் பரவலாகக் காணப்படுகின்றன. இவை உலகளாவிய வளங்கள் என அழைக்கப்படுகின்றன.

உரிமையின் அடிப்படையில் வளங்கள் பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. தனிநபர் வளங்கள் என்பன ஒரு தனி நபருக்கு மட்டும் சொந்தமானவையாகும். எ.கா: அடுக்குமாடிக் கட்டங்கள். ஒரு பகுதியில் உள்ள மக்கள் அந்தப் பகுதியில் உள்ள வளங்களைப் பயன்படுத்திக் கொள்வர். இது சமூக வளம் எனப்படுகிறது. எ.கா. பூங்கா. ஒரு நாட்டின் எல்லைக்கு உட்பட்ட வளங்கள் நாட்டு வளங்கள் ஆகும். எ.கா. இந்தியாவின் வெப்ப மண்டலக் காடுகள். எந்த ஒரு நாட்டின் எல்லைக்கும் உட்படாத பரந்த வெளியில் உள்ள வளங்கள் பன்னாட்டு வளங்கள் எனப்படுகின்றன. எ.கா. திமுங்கலப் புனுகு.

இயற்கை வளங்கள் தொழில் நுட்பத்தினால் மாற்றுருவாக்கம் செய்யப்பட்டு புதிய பொருள்களாகக் கிடைக்கின்றன. இவை மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் ஆகும். எ.கா. சர்க்கரை, பாலங்கள், வீடுகள், சாலைகள். இயற்கையிலிருந்து புதிய வளங்களை உருவாக்கும் தனிநபர் குழுக்கள் மனித வளம் என அழைக்கப்படுகிறது. மனிதன் ஒரு மதிப்பு மிகுந்த வளமாக இருப்பதற்குக் காரணம் அவனிடம் உள்ள கல்வி, உடல் நலம், அறிவு மற்றும் திறனாகும். எ.கா. மருத்துவர், ஆசிரியர், அறிவியலாளர்.

முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலையில் கிடைக்கப்படும் பொருள்களைப் பகிர்ந்து கொள்ள உதவும் போக்குவரத்து மற்றும் வணிக அமைப்பே மூன்றாம் நலை செயல்பாடுகள் என அழைக்கப்படுகின்றன. எ.கா. வங்கி, வணிகம், தகவல் தொடர்புத் துறை. வளத்திட்டமிடுதல் என்பது வளங்களைச் சரியாகப் பயன்படுத்தும் திறன் ஆகும். வளத்தினைக் கவனமாகக் கையாளுதல் என்பது வளங்களைப் பாதுகாத்தல் எனப்படுகிறது.

நிகழ்காலத் தேவைகளை நிறவு செய்து வருங்காலத் தலைமுறையினருக்கும் போதுமான வளங்களை விட்டு வைத்து, சமநிலைத் தன்மையோடு ஏற்படும் வளர்ச்சியே நிலையான வளர்ச்சி எனப்படுகிறது. நிலையான வளர்ச்சி அடைய வீணாக்குதலையும், அதிகப் பயன்பாட்டையும் தடுக்க வேண்டும். மறுபயன்பாடுள்ள வளங்களை செய்தல், மாசைக் கட்டுப்படுத்துதல், சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல், இயற்கைத் தாவரங்களையும் விலங்குகளையும் பாதுகாத்தல், மாற்று வளங்களைப் பயன்படுத்துதல் ஆகியவை நிலையான வளர்ச்சிக்கு வழிவகுக்கும். வளங்களைப் பாதுகாக்க குறைத்தல் (Reduce) மறுபயன்பாடு (Reuse), மறுசுழற்சி செய்தல் (Recycle) ஆகிய மூன்று வழிகளைக் (3 Rs) கையாள வேண்டும்.

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கரும்பிலிருந்து __________ தயாரிக்கப்படுகிறது.

**விடை: சர்க்கரை**

2. வளங்களை ________ கையாளுதல் வளங்களின் பாதுகாப்பு எனப்படுகிறது.

**விடை: கவனமாகக்**

3. குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படும் வளங்கள் ______ எனப்படுகிறது.

**விடை: உள்ளூர் வளங்கள்**

4. தற்போது பயன்படுத்தப்படும் வளங்கள் _______ வளங்கள் என்று அழைக்கப்படுகிறது

**விடை: கண்டறியப்பட்ட**

5. _________ வளம் மிகவும் மதிப்பு மிக்க வளமாகும்.

**விடை: இயற்கை**

6. இயற்கை வளங்களைச் சேகரித்தல் _________ எனப்படுகிறது.

**விடை: முதல்நிலைச் செயல்பாடு**

**II. மிகச் சுருக்கமாக விடையளி**

**1. வளங்கள் என்றால் என்ன?**

மனிதனின் தேவையை நிறைவு செய்யும் எந்த ஒரு பொருளும் வளம் எனப்படுகிறது. எ.கா. பெட்ரோலியம், நீர்

**2. கண்டறியப்பட்ட வளங்கள் என்றால் என்ன?**

சில வளங்களை நாம் தற்போது பயன்படுத்தி வருகிறோம். அவற்றின் இருப்பின் அளவும் நமக்குத் தெரியும். இத்தகைய வளங்கள் கண்டறியப்பட்ட வளங்கள் எனப்படுகிறன. (எ.கா) நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்

**3. உயிரற்ற வளங்களை வரையறு.**

உயிரில்லாத அனைத்து வளங்களும் உயிரற்ற வளங்கள் எனப்படும். எ.கா. எஇலம், நீர், காற்று மற்றும் கனிமங்கள்

**4. மூன்றாம் நிலை செயல்பாடுகள்.**

உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் தேவைப்படும் அனைத்துச் சேவைகளும் மூன்றாம் நிலை செயல்பாடுகள் எனப்படும்.

**5. புதுப்பிக்கக் கூடிய வளங்கள்**

ஒரு முறை பயன்படுத்தப்பட்ட வளங்கள் பின்னர் கால சுழற்சிக்கு ஏற்ப புதுப்பித்துக் கொள்ள இயலும் தன்மையுடைய வளங்கள், புதுப்பிக்கக்கூடிய வளங்கள் என்று அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டு: காற்று, நீர், சூரிய ஒளி.

**6. மனித வளம்**

இயற்கையிலிருந்து புதிய வளங்களை உருவாக்கம் தனிநபர் குழுக்க்ள் மனித வளம் என அழைக்கப்படுகிறது. மனிதன் ஒரு இயற்கை வளம். ஆனாலும் மனிதனை நாம் தனி ஒரு வளமாக பார்க்கின்றோம். மனிதன் ஒரு இயற்கை வளம். ஆனாலும் மனிதனை நாம் தனி ஒரு வளமாக பார்க்கின்றோம். மனிதன் ஒரு மதிப்புமிகு வளமாக பார்ப்பதற்குக் காரணம் அவனிடம் உள்ள கல்வி, உடல்நலம், அறிவு மற்றும் திறனாகும். (எ.கா) மருத்துவர், ஆசிரியர், அறிவியலாளர்.

**7. தனிநபர் வளம்**

தனிநபர் வளங்கள் என்பது ஒரு தனி நபருக்கு மட்டுமே சொந்தமானவையாகும்.(எ.கா) அடுக்குமாடிக் கட்டடங்கள்.

**8. உலகளாவிய வளங்கள் மற்றும் உள்ளூர் வளங்களை வேறுபடுத்துக.**

வளங்கள் அவற்றின் பரவலின் அடிப்படையில், உள்ளூர் வளங்கள் மற்றும் உலகளாவிய வளங்கள் என்று வகைப்படுத்தப்படுகின்றன.

i. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் அட்டுமே காணப்படும் வளங்கள் உள்ளூர் வளங்கள் (Localized Resources) எனப்படும். எ.கா. கனிமங்கள்
ii. சில வளங்கள் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படும் வளங்கள் உலகளாவிய வளங்கள் (Universal Resources) என்று அழைக்கப்படுகின்றன. (எ.கா) சூரிய ஒளி மற்றும் காற்று.

**9. மனிதன் ஒரு இயற்கை வளம், ஆனால் மனிதன் மட்டுமே ஒரு தனி வளமாக கருதப்படுவது ஏன்?**

மனிதன் ஒரு இயற்கை வளம். ஆனாலும் மனிதனை நாம் தனி ஒரு வளமாக பார்க்கின்றோம். மனிதன் ஒரு மதிப்புமிகு வளமாக பார்ப்பதற்குக் காரணம் அவனிடம் உள்ள கல்வி, உடல்நலம், அறிவு மற்றும் திறனாகும். (எ.கா) மருத்துவர், ஆசிரியர், அறிவியலாளர்.

**10. நாட்டு வளம் மற்றும் பன்னாட்டு வளம் – ஒப்பிடுக.**

நாட்டு வளங்கள் என்பது ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குட்பட்ட நிலப்பகுதிகள் மற்றும் பெருங்கடல் பகுதிகளுக்கு உட்பட்ட வளங்கள் ஆகும். எ.கா. இந்தியாவின் வெப்பமண்டல மழைக்காடுகள்.

எந்த ஒரு நாட்டின் எல்லைக்கும் உட்படாத மிகப்பரந்த திறந்த வெளி பெருங்கடல் பகுதியில் காணப்படும் வளங்கள் பன்னாட்டு வளங்கள் (International Resources) என்று அழைக்கப்படுகின்றன. இப்பகுதிக்குட்பட்ட வளங்களை உலக நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தங்களின் மூலமாகவே பயன்படுத்த இயலும். (எ.கா) திமிங்கலப் புனுகு.

**11. மனிதன் உருவாக்கிய வளத்திற்கும், மனித வளத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.**

இயற்கை வளங்கள் தொழில்நுட்பத்தினால் மாற்றுருவாக்கம் செய்யப்பட்டு, புதிய பொருள்களாக் கிடைக்கின்றன. அவ்வாறு பெறப்பட்ட வளங்களை மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் என்று அழைக்கிறோம். (எ.கா): கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை, மனிதனால் உருவாக்கப்படும் எல்லாக் கட்டுமானங்களும் மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்களாகும். (எ.கா) பாலங்கள், வீடுகள், சாலைகள். இயற்கையிலிருந்து புதிய வளங்களை உருவாக்கும் தனிநபர் குழுக்கள் மனித வளம் என அழைக்கப்படுகிறது. மனிதன் ஒரு இயற்கை வளம். ஆனாலும் மனிதனை நாம் தனி ஒரு வளமாக பார்க்கின்றோம். மனிதன் ஒரு மதிப்புமிகு வளமாக பார்ப்பதற்குக் காரணம் அவனிடம் உள்ள கல்வி, உடல்நலம், அறிவு மற்றும் திறனாகும். (எ.கா) மருத்துவர், ஆசிரியர், அறிவியலாளர்.

**12. வளப்பாதுகாப்பை பற்றி காந்தியடிகளின் சிந்தனை என்ன?**

"வளங்கள் மனிதனின் பேராசைக்கு அன்று, அவனது தேவைக்கு மட்டுமே" என்று மகாத்மா காந்தி அவர்கள் கூறுகிறார். உலகில் வளங்கள் குறைவதற்கு மனித இனமே காரணம் எனவும் கூறுகிறார். ஏனென்றால்,

i. வளங்கள் மிகுதியாக எடுக்கப்படுகின்றன.
ii. மனிதத் தேவைகளும் எல்லையை மீறுகின்றன.

**13. வளங்களைப் பாதுகாப்பது எப்படி?**

நிலையான வளர்ச்சி நடைபெற கீழ்க்கண்டவைகளைச் செய்தல் அவசியமாகும்.

i. வளங்கள் குறைந்து கொண்டு வருவதற்கான காரணங்களை அறிதல்.
ii. வீணாக்குதலையும்,அதிகப்படியான பயன்பாட்டினையும் தடுத்தல்
iii. மறுபயன்பாடுள்ள வளங்களை மறுசுழற்சி செய்தல்
iv. மாசைக் கட்டுப்படுத்துதல்

v. சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்.
vi. இயற்கைத் தாவரங்கள் மற்றும் விலங்குகளைப் பாதுகாத்தல்
vii. மாற்று வளங்களைப் பயன்படுத்துதல்

**14. வளத்திட்டமிடல் என்றால் என்ன? அதன் அவசியம் என்ன?**

வளத்திட்டமிடல் என்பது வளங்களை சரியாக பயன்படுத்தும் திறன் ஆகும். வளத்தினைத் திட்டமிடுதல் என்பது அவசியமான ஒன்றாகும். ஏனெனில்,

i. வளங்கள் தற்போது குறைவாக உள்ளன. வளத்திட்டமிடுதல் தற்போது வளங்களைச் சரியாகப் பயன்படுத்தவும். வருங்காலத் தலைமுறைகளுக்குச் சேமித்துவைக்கவும் உதவிபுரிகிறது.
ii. வளங்கள் மிகக் குறைவாக இருப்பின மட்டுமன்று. அவை புவியின் மீது ஒழுங்கற்ற பரவலுடன் காணப்படுகின்றன.
iii. வளங்களை அதிகச் சுரண்டலில் இருந்து தடுத்துப் பாதுகாக்க வளத்திட்டமிடுதல் அவசியமாகும்.

**III. வாக்கியமும் புரிதலும்.**

1. **வாக்கியம் :** வெப்பமண்டலப் பகுதிகளில் அனல் மின்னாற்றலுக்குப் பதிலாக சூரிய ஒளி ஆற்றல் ஒரு சிறந்த மாற்று ஆகும்.

**புரிதல் 1:** நிலக்கரியும் பெட்ரோலியமும் குறைந்து கொண்டே வருகிறது.

**புரிதல் 2:** சூரிய ஆற்றல் என்றும் குறையாது.

அ. புரிதல் 1 மட்டும் சரி
ஆ. புரிதல் 2 மட்டும் சரி
இ. புரிதல் 1 மற்றும் 2 தவறு
**ஈ. புரிதல் 1 மற்றும் 2 சரி**

**2. வாக்கியம்:** வளங்களைப் பாதுகாக்காவிடில் மனித இனம் அழிந்து விடும்.

**புரிதல் 1:** வளங்களைப் பாதுகாக்க வேண்டாம்

**புரிதல் 2:** வளங்களைப் பாதுக்காக வேண்டும்.

அ. புரிதல் 1 மட்டும் சரி
**ஆ. புரிதல் 2 மட்டும் சரி**
இ. புரிதல் 1 மற்றும் 2 தவறு
ஈ. புரிதல் 1 மற்றும் 2 சரி

3. **வாக்கியம்:** மனிதன் விவசாயம் செய்ய தீர்மானித்தான்.

**புரிதல் 1:** உணவு சேகரித்து வந்த மனிதனுக்கு உனவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

**புரிதல் 2:** மனிதன் சேகரித்த உணவு ஊட்டமிக்கதாக இல்லை.

**அ. புரிதல் 1 மட்டும் சரி**

ஆ. புரிதல் 2 மட்டும் சரி

இ. புரிதல் 1 மற்றும் 2 தவறு

ஈ. புரிதல் 1 மற்றும் 2 சரி

**IV. பொருத்துக.**

1. இயற்கை வளம் - கனிமங்கள்
2. பன்னாட்டு வளம் - நிலையான வளர்ச்சி
3. குறைத்தல், மறு பயன்பாடு, மறுசுழற்சி - காற்று
4. புதிப்பிக்க இயலாதது - உற்பத்தி செய்தல்
5. உலகளாவிய வளம் - திமிங்கலப் புனுகு
6. இரண்டாம் நிலை செயல்பாடுகள் - காடு

**விடை:**

1. இயற்கை வளம் - காற்று
2. பன்னாட்டு வளம் - திமிங்கலப் புனுகு
3. குறைத்தல், மறு பயன்பாடு, மறுசுழற்சி - நிலையான வளர்ச்சி
4. புதிப்பிக்க இயலாதது - கனிமங்கள்
5. உலகளாவிய வளம் - காடு
6. இரண்டாம் நிலை செயல்பாடுகள் - உற்பத்தி செய்தல்

## குடிமையியல்

## 1. தேசியச் சின்னங்கள்



www.winmeen.com

புலி, யானை, டால்பின், மயில், கருநாகம், ஆலமரம், மாம்பழம், கங்கை, தாமரை ஆகியவை இந்தியாவின் இயற்கை தேசியச் சின்னங்கள் ஆகும். வரையாடு தமிழகத்தின் மாநில விலங்கு ஆகும். நமது மாநிலப் பறவை மரகதப் புறா. தமிழ்நாட்டின் மாநில மலர் செங்காந்தள் மலர். நமது தமிழகத்தின் மாநில மரம் பனைமரம் ஆகும்.

இந்திய அரசியலமைப்புச் சபை 1947, ஜூலை 22இல் மூவண்ணக் கொடியை தேசியக் கொடியாக ஏற்றுக் கொண்டது. இந்திய தேசியக் கொடியை உருவாக்கியவர் பிங்காலி வெங்கையா. விடுதலை இந்தியாவின் முதல் தேசியக் கொடி வேலூர் மாவட்டத்தில் உள்ள குடியாத்தத்தில் நெய்யப்பட்டது. தற்போது இந்தக் கொடி சென்னை, புனித ஜார்ஜ் கோட்டை அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

நமது தேசியக்கொடியின் நீள, அகலம் 3 : 2 என்ற விகிதத்தில் அமைந்துள்ளது. நடுவில் உள்ள அசோகச்சக்கரம் கருநீல நிறமானது. இதில் 24 ஆரங்கள் உள்ளன. நமது தேசியக் கொடியில் மூன்று வண்ணங்களும் சம அளவில் கிடைமட்டமாக உள்ளன. மேலே உள்ள காவி நிறம் துணிவையும், தியாகத்தையும் குறிக்கிறது. கீழ்ப்பகுதியில் உள்ள பச்சை நிறம் செழுமையையும் வளத்தையும் குறிக்கிறது. இடையில் உள்ள வெள்ளை நிறம் நேர்மை, அமைதி மற்றும் தூய்மையைக் குறிக்கிறது.

சாரநாத் அசோகத் தூணின் உச்சியில் உள்ள நான்முகச் சிங்கம் இந்தியாவின் தேசிய இலச்சினை ஆகும். அடிப்பகுதியில் 'வாய்மையே வெல்லும்' என்ற பொருள் கொண்ட 'சத்யமேவ ஜெயதே' என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்பகுதியில் யானை, குதிரை, காளை, சிங்க ஆகிய உருவங்கள் அமைந்துள்ளன. இவற்றிற்கிடையே தர்ம சக்கரம் அமைந்துள்ளது. இந்த இலச்சினை இந்திய அரசின் அலுவல்முறை கடித முகப்புகளிலும், இந்திய நாணயங்களிலும், கடவுச் சீட்டுகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

'ஜன கண மன' என்பது நமது தேசிய கீதம் ஆகும். இந்தப் பாடலை இயற்றியவர் இரவீந்தரநாத் தாகூர். இது வங்காள மொழியில் எழுதப்பட்டு பின்னர் இந்தியில் மொழியாக்கம் செய்யப்பட்டது. தேசிய கீதத்தை சுமார் 52 வினாடிகளில் பாட வேண்டும். பாடும்போது அனைவரும் எவ்வித அசைவுகளும் இன்றி நேராக நிற்க வேண்டும். பாடலின் பொருள் புரிந்து பாட வேண்டும்.

'வந்தே மாதரம்' எனத் தொடங்கும் பாடல் நமது தேசியப் பாடல் ஆகும். இது வங்க எழுத்தாளர் பங்கிம் சந்திர சட்டர்ஜி என்பவரால் எழுதப்பட்டது. இப்பாடல் ஆனந்த மடம் என்ற நாவலிலிருந்து எடுக்கப்பட்டது. தேசிய கீதத்திற்கு இணையான சிறப்பு இந்த தேசியப் பாடலுக்கும் அளிக்கப்படுகிறது. 'இந்தியா எனது தய்நாடு' எனத் துவங்கும் வாக்குறுதி நமது தேசிய உறுதிமொழி ஆகும். இதை பிதிமாரி வெங்கட சுப்பாராவ் என்பவர் தெலுங்கில் எழுதினார்.

பாலிலிருந்து தயிரை உருவாக்கப் பயன்படுவது லாக்டோ பேசில்லஸ் டெல்புரூக்கி எனப்படும் நுண்ணுயிர் ஆகும். இதுவே நம் நாட்டின் தேசிய நுண்ணுயிராக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ரூபாய் என்பது இந்திய நாணயம் ஆகும். இதற்கான சின்னம் ₹. இந்தச் சின்னத்தை வடிவமைத்தவர் தமிழகத்தைச் சேர்ந்த டி.உதயகுமார். பேரரசர் கனிஷ்கர் காலத்தில் சக ஆண்டு முறை தொடங்கியது. இந்த முறையை நமது தேசிய நாட்காட்டி பின்பற்றுகிறது. வான் இயற்பியலாளர் மேக்னாத் சாகா தலைமையிலான நாட்காட்டி சீரமைப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில் 1957 மார்ச் 22 முதல் இந்த நாட்காட்டி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 15ஆம் தேதி இந்திய சுதந்திரத் திருநாள் ஆகும். அன்றைய தினம் நாட்டின் பிரதமர் டெல்லி செங்கோட்டையில் கொடி ஏற்றுவது மரபாக உள்ளது. 1950 ஜனவரி 26 ஆம் நாள் இந்தியா குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. குடியரசு நாளில் குடியரசுத் தலைவர் டெல்லி செங்கோட்டையில் கொடியேற்றுவது வழக்கம். இந்தியக் குடியரசின் மூன்றாவது நாளான ஜனவரி 29, அன்று 'பாசறைக்குத் திரும்புதல்' என்ற விழா சிறப்பாக நளைபெறும். முப்படையைச் சேர்ந்தவர்கள் இந்த நிகழ்ச்சியை நடத்துவர்.

மகாத்மா காந்து நம்நாட்டின் 'தேசத் தந்தை' ஆவார். அவரது பிறந்த நாளாகிய அக்டோபர் 2, காந்தி ஜெயந்தி என்று கொண்டாடப்படுகிறது. இது தேசிய நாட்களில் ஒன்றாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. காந்தியின் பிறந்தநாளை 'சர்வதேச அகிம்சை நாள்' என 2007 ல் ஐ.நா. சபை அங்கீகரித்துக் கொண்டாடி வருகிறது.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. தேசியப்பாடலான வந்தேமாதரத்தை இயற்றியவர்_________

அ. பிங்காலி வெங்கையா ஆ. ரவீந்திரநாத் தாகூர்

**இ. பங்கிம் சந்திர சட்டர்ஜி** ஈ. காந்திஜி

2. இந்தியாவின் தேசிய கீதம் ______

**அ. ஜன கண மன** ஆ. வந்தே மாதரம்

இ. அமர் சோனார் பாங்கலே ஈ. நீராடுங் கடலுடுத்த

3. ஆனந்தமடம் என்ற புகழ் பெற்ற நாவலை எழுதியவர்_________

அ. அக்பர் ஆ. ரவீந்திரநாத் தாகூர்

**இ. பங்கிம் சந்திர சட்டர்ஜி** ஈ. ஜவஹர்லால் நேரு

4. ________ பிறந்த நாளைச் சர்வதேச அகிம்சை நாளாகக் கொண்டாடுகிறோம்.

**அ. மகாத்மா காந்தி** ஆ. சுபாஷ் சந்திரபோஸ்

இ. சர்தார் வல்லபாய் பட்டேல் ஈ. ஜவஹர்லால் நேரு

5. நம் தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரத்தின் நிறம் _______

அ. வெளிர் நீலம் **ஆ. கருநீலம்** இ. நீலம் ஈ. பச்சை

6. இந்திய விடுதலை நாளில் பறக்கவிடப்பட்ட முதல் தேசியக்கொடி _______ அருங்காட்சியகத்தில் உள்ளது.

**அ. சென்னை கோட்டை** ஆ. டெல்லி

இ. சாரநாத் ஈ. கொல்கத்தா

7. தேசிய கீதத்தை இயற்றியவர் _________

அ. தேவேந்திரநாத் தாகூர் ஆ. பாரதியார்

**இ. ரவீந்திரநாத் தாகூர்** ஈ. பாலகங்காதரதிலகர்

8. தேசிய கீதம் பாடுவதற்கு எடுத்துக் கொள்ளவேண்டிய கால அளவு ________

அ. 50 வினாடிகள் ஆ. 52 நிமிடங்கள்

**இ. 52 வினாடிகள்** ஈ. 20 வினாடிகள்

9. 1896 தேசிய காங்கிரஸ் மாநாட்டின் போது வந்தே மாதரம் பாடலைப் பாடியவர்______

அ. பங்கிம் சந்திர சட்டர்ஜி ஆ. ரவீந்திரநாத் தாகூர்

இ. மகாத்மா காந்தி **ஈ. சரோஜினி நாயுடு**

10. விடுதலை நாளிம்போது டெல்லியில் கொடியேற்றுபவர் _______

**அ. பிரதம அமைச்சர்** ஆ. குடியரசுத் தலைவர்

இ. துணைக் குடியரசுத் தலைவர் ஈ. அரசியல் தலைவர் எவரேனும்

**II. கோடிட்ட இட்த்தை நிரப்புக.**

1. இந்திய தேசிய இலச்சினை _______ ல் உள்ள அசோகத் தூணிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**விடை: சாரநாத்**

2. இந்தியாவின் தேசியக் கனி ____

**விடை: மாம்பழம்**

3. இந்தியாவின் தேசியப் பறவை ______

**விடை: மயில்**

4. இந்தியாவின் தேசிய மரம் _______

**விடை: ஆலமரம்**

5. 1947 விடுதலை நாளின் போது ஏற்றப்பட்ட கொடி _______ என்னுமிடத்தில் நெசவு செய்யப்பட்டது.

**விடை: குடியாத்தம்**

6. இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் _______

**விடை: பிங்காலி வெங்கையா**

7. சக ஆண்டு முறையைத் துவக்கியவர் ________

**விடை: பேரரசர் கனிஷ்கர்**

8. இந்தியாவின் மிக நீளமான ஆறு __________

**விடை: கங்கை**

9. இந்திய நாணயத்தின் குறியீட்டை வடிவமைத்தவர்_________

**விடை: D. உதயகுமார்**

10. தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரம் _______ ஆரங்களைக் கொண்டது.

**விடை: 24**

11. நான்முகச் சிங்கம் தற்போது ________ அருங்காட்சியகத்தில் உள்ளது.

**விடை: சாரநாத்**

12. தேசிய கீதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு _______

**விடை: 1950**

13. ____________ இந்தியாவின் தேசிய நுண்ணுயிரியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**விடை: லாக்டோ பேசில்லஸ்**

**IV. நிரப்புக.**

1. காவி - தைரியம் ; வெள்ளை - **அமைதி, தூய்மை**

2. குதிரை - ஆற்றல் ; காளை – **உழைப்பு**

3. 1947 - விடுதலை நாள் ; 1950 - **குடியரசு நாள்**

**V. பொருந்தியுள்ளவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. ரவீந்திரநாத் தாகூர் - அ. தேசியப்பாடல்

2. பங்கிம் சந்திர சட்டர்ஜி - ஆ. தேயக்கொடி

3. பிங்காலி வெங்கையா - இ. வான் இயற்பியலாளர்

4. மேக்னாத் சாகா - ஈ. தேசிய கீதம்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | அ | ஈ | ஆ | இ |
| ஆ) | ஈ | அ | இ | ஆ |
| **இ)** | **ஈ** | **அ** | **ஆ** | **இ** |

**VI. பொருத்தியபின் பொருந்தாதது எது?**

1. தேசிய ஊர்வன - புலி

2. தேசிய நீர்வாழ் விலங்கு - லாக்டோ பேசில்லஸ்

3. தேசிய பாரம்பரிய விலங்கு - ராஜநாகம்

4. தேசிய நுண்ணுயிரி - டால்பின்

**விடை: 1. ராஜநாகம் 2. டால்பின் 3. லாக்டோ பேசில்லஸ்**

**பொருந்தாதது: 3. தேசிய பாரம்பரிய விலங்கு – புலி**

**குறிப்பு : புலி தேசிய விலங்காகும். யானை தேசிய பாரம்பரிய விலங்காகும்.**

**VII. தவறான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்**

1. அ) தேசியக் கொடியின் நீள அகலம் 3:2 என்ற விகிதத்தில் உள்ளது.

ஆ) அசோகச் சக்கரம் 24 ஆரங்களைக் கொண்டது.

**இ) அசோகச் சக்கரம் வெளிர் நீல நிறமுடையது.**

2. அ) பிங்காலி வெங்கையா தேசியக் கொடியை வடிவமைத்தார்.

**ஆ) விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக் கொடி தற்போது கொல்கத்தா அருங்காட்சியகத்தில் உள்ளது.**

இ) விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக் கொடி குடியாத்தத்தில் நெசவு செய்யப்பட்டது.

**VIII. சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. ஆகஸ்டு 15 அன்று விடுதலை நாள் கொண்டாடப்படுகிறது.**

2. நவம்பர் 26 அன்று குடியரசு நாள் கொண்டாடப்படுகிறது.

3. அக்டோபர் 12 அன்று காந்தி ஜெயந்தி கொண்டாடப்படுகிறது.

**IX. விடையளிக்கவும்**

**1. தேசியக் கொடியில் உள்ள நிறங்கள் குறிப்பன எவை?**

மேல்பகுதியில் உள்ள காவி நிறம் தைரியத்தையும் தியாகத்தையும் குறிக்கிறது. கீழ்ப்பகுதியில் உள்ள பச்சை நிறம் செழுமையையும் வளத்தையும் குறிக்கிறது. இடையில் உள்ள வெள்ளைநிறம் நேர்மை, அமைதி மற்றும் தூய்மையைக் குறிக்கிறது. நடுவில் கருநீலநிறத்தில் அமைந்துள்ள அசோகச் சக்கரம் அறவழியையும் அமைதியையும் வலியுறுத்துகிறது.

**2. தேசிய இலச்சினையின் பாகங்கள் எவை?**

சாரநாத் அசோகத் தூணின் உச்சியில் அமைந்திருக்கும் நான்முகச் சிங்கம் இந்தியாவின் தேசிய இலச்சினையாக ஜனவரி 26, 1950இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் அடிப்பகுதியில் 'சத்யமேவ ஜெயதே' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. 'வாய்மையே வெல்லும்' என்பதே இதன் பொருளாகும். தேசிய இலச்சினை மேல்பகுதி, அடிப்பகுதி என இரண்டு பகுதிகளைக் கொண்டது. மேல்பகுதியில் நான்கு சிங்க உருவங்கள் ஒன்றுக்கொன்று பின்பக்கமாக பொருந்தியிருக்குமாறு வட்டவடிவமான பீடத்தில் வைக்கப்பட்டுள்ளன. நமது இலச்சினையில் மூன்று சிங்க உருவங்களை மட்டுமே காண இயலும். அடிப்பகுதியில் யானை, குதிரை, காளை, சிங்கம் ஆகிய உருவங்கள் அமைந்துள்ளன. இவ்வுருவங்களுக்கிடையே தர்மசக்கரம் அமைந்துள்ளது.

**3. தேசிய கீதத்தின் சிறப்பு அம்சங்கள் எவை?**

'ஜன கண மன......' நமது தேசிய கீதமாகும். இது ஒந்தியாவின் இறையாண்மை என்னும் ஒருமைப்பாட்டிற்கு அடையாளச் சின்னமாக விளங்குகிறது.இப்பாடல் ரவீந்திரநாத் தாகூரால் வங்காள மொழியில் எழுதப்பட்டது. இதன் இந்தி மொழியாக்கம் ஜனவரி 24, 1950 இல் இந்திய அரசியலமைப்புச் சபையால் தேசிய கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாடும்போது பின்பற்ற வேண்டியன:

- இக்கீதத்தை சுமார் 52 வினாடிகளில் பாட/இசைக்க வேண்டும்.
- பாடும்போது அனைவரும் எவ்வித அசைவுகளும் இன்றி நேராக நிற்க வேண்டும்.
- பொருள் புரிந்து சரியாகப் பாடவேண்டும்.

**4. இந்திய நாணயத்தின் குறியீட்டின் வடிவத்தை வரைந்து வரையறுக்கவும்.**

இந்தியாவின் அதிகாரப்பூர்வ பணத்தின் பெயர் ரூபாய். 16-ம் நூற்றாண்டில் மன்னர் ஷெர்ஷா சூரி வெளியிட்ட வெண்ணி நாணயத்துக்கு 'ருபியா' என்று பெயர். அதுவே ரூபாய் என்று மருவியுள்ளது. ரூபாய்க்கான சின்னம் ₹. இந்தச் சின்னத்தை 2010-ல் வடிவமைத்தவர் தமிழகத்தைச் சேர்ந்த டி.உதயகுமார்.

**5. தேசிய இலச்சினை எங்கெல்லாம் பயன்படுத்தப்படுகிறது?**

தேசிய இலச்சினைஇந்ஹிய அரசின் அலுவல் முறை கடித முகப்புகளிலும் இந்திய நாணயங்களிலும் கடவுச்சீட்டுகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

**6. தேசிய உறுதி மொழியை எழுதியவர் யார்?**

“இந்தியா எனது தாய்நாடு . . . . .” எனத் தொடங்கும் நமது தேசிய உறுதிமொழியைப் பிதிமாரி வெங்கட சுப்பாராவ் என்பவர் தெலுங்கில் எழுதினார்.

**7. தேசிய இலச்சினையின் அடிப்பாகத்தில் இடம் பெற்றுள்ள விலங்குகள் எவை?**

தேசிய இலச்சினையின் அடிப்பாகத்தில் யானை, குதிரை, காளை, சிங்கம்ஆகிய உருவங்கள் அமைந்துள்ளன. இவ்வுருவங்களுக்கிடையே தர்மசக்கரம் அமைந்துள்ளது.

**8. இயற்கை தேசிய சின்னங்கள் எவை?**

புலி, யானை, டால்பின், மயில், கருநாகம், ஆலமரம், மாம்பழம், கங்கை, தாமரை ஆகியவை இயற்கை தேசியச் சின்னங்களாகும்.

**9. மயில்கள் சரணாலயம் எங்குள்ளது?**

தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விராலிமலையில் மயில்களுக்கான சரணாலயம் உள்ளது.

**10. இந்திய தேசியக்கொடியயைத் தயாரிக்கும் உரிமை யாருக்கு அளிக்கப்பட்டுள்ளது?**

KKGSSF எனப்படும் கர்நாடகா காதி கிராமாத்யோகா சம்யுக்த சங்கக் கூட்டமைப்பு (Karnataka Khadi and Gramodyoga Samyukta Sangh Federation –KKGSSF) என்ற ஒரே ஒரு கூட்டமைப்பிற்கு மட்டும் இந்த உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

## 2. இந்திய அரசியலமைப்புச் சட்டம்

1929ம் ஆண்டு லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முழு சுயராஜ்யத்தை (Purna Swaraj) அடைவது என்ற முழக்கம் வலுப்பெற்றது. அதனைத் தொடர்ந்து 1930, ஜனவரி 26 அன்று உமு சுதந்திர நாளாகக்(Purna Swaraj Day) கொண்டாடப்பட்டது. பின்னர் அதுவே நமது குடியரசு தினமாக ஆனது.

“அரசமைப்புச் சட்டம் ஒரு நாட்டிர்குத் தேவையான சில அடிப்படை விதிகள், கொள்கைகளை உருவாக்கி ஆவணப்படுத்துகிறது. அத்துடன் குடிமக்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளை வரையறுக்கிறது. பிறகு அச்சட்டத்தின் அடிப்படையில் தான் நாடு ஆளப்படும்.” நமது அரசமைப்புச் சட்டம் 1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. அதைத்தான் நாம் குடியரசு தினமாகக் கொண்டாடுகிறோம்.

இந்திய அரசமைப்புச் சட்டம்தான் நமது நாட்டின் உயர்ந்தபட்ச சட்டமாக விளங்குகிறது. இதனை உருவாக்க 1946 ஆம் ஆண்டு அரசமப்பு நிர்ணய மன்றம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக முனைவர் ராஜேந்திர பிரசாத் தேர்தெடுக்கப்பட்டார். இதில் 15 பென் உறுப்பினர்கள் இருந்தனர். எட்டுப் பேர் கொண்ட அரசமைப்புச் சட்ட வரைவுக் குழு உருவாக்கப்பட்டு அதன் தலைவராக அம்பேத்கார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தக் குழுவினர் 60 நாடுகளின் அரசமைப்புச் சட்டங்களை வாசித்து அவற்றில் இருந்த சிறப்பான பகுதிகளை முன்மாதிரியாகக் கொண்டு நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கினார். 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் முழுமையான அரசமைப்புச் சட்டம் தயாரானது. இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் நமது அரசமைப்புச் சட்டத்தை அன்றுதான் ஏற்றுக் கொண்டது.

நமது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை ஒவ்வோர் இந்தியருக்குமான நீதி, தன்செயலுரிமை, சமத்துவத்தை உறுதி செய்வதோடு, சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறது. இந்த முகப்புரை இந்தியாவை இறையாண்மை, சமத்துவம், மதச்சார்பின்மை, மக்களாட்சிக் குடியரசு என்று வரையறை செய்கிறது. அரசமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களே நாட்டை ஆள்கிறார்கள். இவ்வாறு ஒரு நாட்டின் உச்சநிலை அதிகாரத்தையே இறையாண்மை என்கிறோம்.

ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகத் தேவையான உரிமகளே அடிப்படை உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன. சம உரிமை, சுதந்திரமாகச் செயல்படும் உரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமை, சுதந்திர சமய உரிமை, கலாச்சார மற்றும் கல்வி பெறும் உரிமை, சட்டத் தீர்வு பெறும் உரிமை ஆகியவை நமது அடிப்படை உரிமைகள் ஆகும்.

அரசுகள் சட்டமியற்றும் போதும், ஆட்சி செய்யும் போதும் கவனத்தில் கொள்ள வேண்டிய சில வழிகாட்டல்களை அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. இவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய நெறிமுறைகள் ஆகும். பதினெட்டு வயது நிரம்பிய இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் ஓட்டளிக்கும் உரிமையைப் பெறுகிறார்கள். இது ஓட்டுரிமை எனப்படும். இந்த உரிமையைப் பெற ஜாதி, மதம், பாலினம், பொருளாதார அடுக்கு உட்பட எதுவும் தடையாக முடியாது.

உரிமைகளைப் பெறும் குடிமகன் ஒவ்வொருவருக்கும் சில கடமைகளும் உள்ளன. தேசியக் கொடியையும், தேசிய கீதத்தையும் மதித்து நடப்பது, அரசியல் சட்டத்தை மதித்துப் பேணிவது, நாட்டைப் பாதுகாப்பது, நாட்டுக்காக தேவைப்படும் போது சேவை செய்வது, சாதி, மத, மொழி, இன எல்லைகளைக் கடந்து அனைவருடனும் சகோதர மனப்பான்மையுடன் இருப்பது, நமது பாரம்பரியத்தைக் காப்பது, காடுகள், ஏரிகள், நதிகள் போன்ற இயற்கை வளங்களையும் வனவிலங்குகளையும் பாதுகாப்பது போன்றவை நமது அடிப்படைக் கடமைகள் ஆகும்.

அரசமைப்பு சட்ட வரைவுக் குழுவின் தலைவரான பி.ஆர்.அம்பேத்கர் நமது அரசமைப்புச் சட்டத்தின் தந்தை என்று மதிக்கப்படுகிறார். தற்போது நமது அரசமைப்புச் சட்டத்தில் 448 உறுப்புகள், 25 பகுதிகள் மற்றும் 12 அட்டவணைகள் உள்ளன. அரசமைப்புச் சட்டம் 16.9.2016 வரை 101 முறை திருத்தப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரதிகள் நாடாளுமன்ற நூலகத்தில் ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பேழையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. அரசமைப்பு தினம் கொண்டாடப்படும் நாள் ________

அ. ஜனவரி 26 ஆ. ஆகஸ்டு 15 **இ. நவம்பர் 26** ஈ. டிசம்பர் 9

2. அரசமைப்புச் சட்டத்தை _________ஆம் ஆண்டு அரசியல் நிர்ணயசபை ஏற்றுக்கொண்டது.

அ. 1946 ஆ. 1950 இ. 1947 **ஈ. 1949**

3. அரசமைப்புச் சட்டத்தில் இதுவரை ___________ சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

**அ. 101** ஆ. 100 இ. 78 ஈ. 79

4. இஃது அடிப்படை உரிமை அன்று ________

அ. சுதந்திர உரிமை ஆ. சமத்துவ உரிமை

இ. **ஒட்டுரிமை** ஈ. கல்வி பெறும் உரிமை

5. இந்தியக் குடிமக்களின் வாக்குரிமைக்கான வயது __________

அ. 14 **ஆ. 18** இ. 16 ஈ. 21

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அரசியல் நிர்ணய சபையின் தலைவராக ________ தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**விடை: முனைவர் ராஜேந்திர பிரசாத்**

2. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை என போற்றப்படுபவர் _______

**விடை: அண்ணல் அம்பேத்கார்**

3. நம் அடிப்படை உரிமைகளை உறுதி செய்யவும் பாதுகாக்கவும் செய்வது _______

**விடை: உச்ச நீதிமன்றம்**

4. நம் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் ______

**விடை: ஜனவரி 26, 1950**

**III. பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. சுதந்திர தினம் - அ. நவம்பர் 26

2. குடியரசு தினம் - ஆ. ஏப்ரல் 1

3. இந்திய அரசமைப்பு தினம் - இ. ஆகஸ்டு 15

4. அனைவருக்கும் கல்வி உரிமை - ஈ. ஜனவரி 26

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | இ | அ | ஈ | ஆ |
| **ஆ)** | **இ** | **ஈ** | **அ** | **ஆ** |
| இ) | ஈ | ஆ | அ | இ |

**IV. வினாக்களுக்கு விடையளி.**

**1. அரசமைப்பு நிர்ணய சபை எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?**

1946

**2. வரைவுக்குழுவில் எத்தனை உறுப்பினர்கள் பங்கேற்றனர்?**

389

**3. அரசமைப்பு நிர்ணய சபையில் பங்கேற்ற பெண் உறுப்பினர்கள் எத்தனை பேர்?**

15

**4. அரசமைப்புச் சட்ட உருவாக்கம் எப்போது முடிவடைந்தது?**

26 நவம்பர் 1949

**V.வினாக்களுக்கு விடையளி.**

**1. ஜனவரி 26 குடியரசு தினமாக ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது?**

நமது அரசமைப்புச் சட்டம் 1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. அதைத்தான் நாம் குடியரசு தினமாகக் கொண்டாடுகிறோம்.

**2. அரசமைப்புச் சட்டம் என்றால் என்ன?**

அரசமைப்புச் சட்டம் ஒரு நாட்டிற்குத் தேவையான சில அடிப்படை விதிகள், கொள்கைகளை உருவாக்கி ஆவணப்படுத்துவதோடு, தனது குடிமக்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளை வரையறுக்கிறது. பிரகு அச்சட்டத்தின் துணையோடுதான் அந்நாடு ஆளப்படும்.

**3. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் சிறப்பம்சங்களைப் பட்டிலிடுக.**

இந்திய அரசமைப்புச் சட்டம்தான் நமது நாட்டின் உயர்ந்தபட்ச சட்டமாக விளங்குகிறது. அது அடிப்படை அரசியல் கொள்கைகளை வரையறுப்பது, கட்டமைப்புகள், வழிமுறைகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குவது, அரச நிறுவனங்களின் கடமைகளைப் பட்டியலிடுவது, குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளை நிர்ணயம் செய்வது, வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குவது ஆகியவற்றின் வழியே ஓர் ஒட்டுமொத்தக் கட்டமைப்பை நமக்குத் தருகிறது.

**4. அடிப்படை உரிமகள் என்றால் என்ன?**

ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகத்தேவையான உரிமைகளே அடிப்படை உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன. சம உரிமை, சுதந்திரமாகச் செயல்படும் உரிமை, சுரண்டலுக்கெதிரான உரிமை, சுதந்திர சமய உரிமை, கலாச்சார மற்றும் கல்வி பெறும் உரிமை, சட்டத்தீர்வு பெறும் உரிமை ஆகியவை இன்றியமையாத உரிமைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**5. முகப்புரை என்றால் என்ன?**

அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரைதான் முகப்புரை என்று அழைக்கப்படுகிறது. அது இந்தியாவை இறையாண்மை, சமத்துவம், மதச்சார்பின்மை, மக்களாட்சிக் குடியரசு என்று வரையறை செய்கிறது.

**6. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற சொற்களின் மூலம் புரிந்து கொள்வது என்ன?**

சுதந்திரம் என்பது நமது நாட்டில் எங்கும் செல்லக்கூடிய உரிமை, விரும்பிய தொழிலைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஆகியவற்றைக் குறிக்கும். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை சமத்துவம் உணர்த்துகிறது. சகோதரத்துவம் என்பது பிறரோடு பழகும் போது பாசத்துடனும் உண்மையான அன்புடனும் பழகும் தன்மையையும் குறிக்கிறது.

**7. வரையறு. இறையாண்மை**

அரசமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களிடம் நிறைவேற்று அதிகாரம் இருக்கிறது. இப்படியாக ஒரு நாட்டின் உச்சநிலை அதிகாரத்தையே இறையாண்மை என்கிறோம்.

## பொருளியல்

## 1. பொருளியல் – ஓர் அறிமுகம்

கிராமங்களில் வாரம் அல்லது மாதம் ஒரு முறை பொதுவான ஓர் இடத்தில் குறிப்பிட்ட நேரத்திற்கு மக்களின் தேவைக்கேற்ற குறிப்பிட்ட பொருள்களை ஒருங்கிணைத்து விற்பனை செய்யும் இடம் சந்தை எனப்படுகிறது. அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மக்கள் அங்காடியிலிருந்து வாங்கிப் பயன்படுத்தும் பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் என அழைக்கப்படுகின்றன. எ.கா. அரிசி, துணிகள், மிதிவண்டிகள்.

பழைய காலத்தில் ஒரு பண்டத்திற்குப் பதிலாக மற்றொரு பண்டத்தை மாற்றிக் கொள்ளும் முறை இருந்தது. இதற்கு பண்ட மாற்று முறை எனப்பெயர். இதில் பண்டங்களின் மதிப்பில் வேறுபாடு இருந்ததால் பல பிரச்சனைகள் ஏற்பட்டன. எனவே இச்சிக்கல்களைத் தீர்க்க பணம் என்ற கருவி நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

மக்கள் பலவிதமான தொழில்கள் செய்து தங்கள் வாழ்விற்குத் தேவையான பணம் ஈட்டுகின்றனர். அதில் ஒரு பகுதியைத் தங்கள் தேவைக்காக ஒதுக்கி வைத்து விடுகின்றனர். கையில் கிடைக்கும் வருமானத்தில் நுகர்வுக்குச் செலவு செய்தது போக எதிர்காலத் தேவைக்காக ஒதுக்கப்படும் ஒரு தொகை சேமிப்பு எனப்படுகிறது.

மக்களின் தொழில்கள் மூவகைப்படும். 1) முதல் நிலைத் தொழில்கள், 2) இரண்டாம் நிலைத் தொழில்கள் 3) மூன்றாம் நிலைத் தொழில்கள். உணவுக்காகவும், தொழிலுக்காகவும் முலப் பொருள்களை உற்பத்தி செய்வது முதல்நிலைத் தொழில் ஆகும். வேளாண்மை, கால்நடைகள் வளர்த்தல், மீன் பிடித்தல், கனிமங்களைச் சேகரித்தல், கனிகள், தேன், மூலிகைகளைச் சேகரித்தல் போன்றவை முதல் நிலைத் தொழில்கள் ஆகும்.

மூலப் பொருள்களிலிருந்து இயந்திரங்கள் மூலம் அன்றாடத் தேவைக்கானா பொருள்களைத் தயாரிப்பது இரண்டாம் நிலைத் தொழில் அல்லது தொழில்துறை என அழைக்கப்படுகிறது. பருத்தி, சர்க்கரை, உணவு பதப்படுத்தல் போன்றவை வேளாண் அடிப்படைத் தொழில்கள் ஆகும். காகிதத் தொழில், மரச்சாமான்கள், கட்டுமானப் பொருட்கள் காடுசார்ந்த தொழிற்சாலைகள் ஆகும். சிமெண்ட், இரும்பு, அலுமினியத் தொழிற்சாலைகள் கனிமத் தொழிற்சாலைகள் என அழைக்கப்படுகின்றன. கடல் உணவு பதப்படுத்தல் கடல்சார் தொழிற்சாலைகள் எனப்படுகிறது.

தொழிற் துறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் தொழில்கள் மூன்றாம் நிலைத் தொழில்கள் அல்லது சேவைத் துறைத் தொழில்கள் என அழைக்கப்படுகின்றன. சாலை, ரயில், கடல், ஆகாயப் போக்குவரத்துகள் போக்குவரத்து சார்ந்தவை. வாங்குதல், விற்றல் போன்ற வணிக நிகழ்வுகளும், பணப் பரிமாற்றம், வங்கிச் சேவைகள் உள்ளடக்கிய வங்கித் தொழில்களும் மூன்றாம் நிலைத் தொழில்கள் எனப்படுகின்றன.

உலகில் 50 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் நகரங்களில் தான் வாழ்கிறார்கள். நமது தமிழ்நாட்டில் 47 சதவீத மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர். தமிழ்நாடு உற்பத்தித் தொழிலும் சேவைத் தொழிலிலும் சிறந்து விளங்கும் மாநிலமாகத் திகழ்கிறது. இவை நகரங்களை மையமாகக் கொண்டே இயங்குகின்றன. நகரங்களில் வேலை வாய்ப்புகள் அதிகம்: சிறு தொழில் செய்பவர்களும், அமைப்பு சாரா தொழிலாளர்களும் நகரங்களில் அதிகம் உள்ளனர்.

சலவையகம், முடி திருத்தம் போன்ற சிறுதொழில் செய்பவர்களின் எண்ணிக்கை கிராமங்களில் உள்ளதைக் காட்டிலும் நகரங்களில் மிக அதிகமாகும். நன்கு வடிவமைக்கப்பட்ட சாலைகள், துறைமுக, விமானநிலையம், ரயில் நிலையம் ஆகியவை ஏற்றுமதி இறக்குமதிக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. உயர்கல்வி, மருத்துவ வசதி ஆகியவை நகரங்களில் அதிகம் கிடைக்கிறது. அன்றாடப் பணப் புழக்கமும்

நகரங்களில் அதிகம் உள்ளது. எனவே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நகரங்கள் அதிக அளவில் உறுதுணையாக உள்ளன.

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தானியங்களை உற்பத்தி செய்பவர்கள் _____

**விடை: முதல்நிலைத் தொழில்புரிவோர்**

2. 'தேன் சேகரித்தல்' என்பது ________ தொழில்.

**விடை: முதல் நிலைத்**

3. மூலப்பொருட்களைப் பயன்பாட்டுப் பொருட்களாக மாற்றுவது _____எனப்படும்.

**விடை: இரண்டாம் நிலைத் தொழில்**

4. காந்தியடிகளின் கூற்றுப்படி, கிராமங்கள் நம் நாட்டின்_________

**விடை: முதுகெலும்பு ஆகும்.**

5. தமிழ்நாட்டில் ________ சதவீத மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர்.

**விடை: 47%**

6. வேளாண்மை என்பது ______ நிலைத் தொழிலாகும்.

**விடை: முதன்மை**

7. பொருளாதார நடவடிக்கைகள் _____ அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.

**விடை: பயன்பாடு**

8. சர்க்கரை ஆலை _______ நிலைத் தொழிலாகும்.

**விடை: இரண்டாம்**

9. வேளாண்மைசார் தொழிற்சாலை __

**விடை: பருத்தியாலை**

10. பால்பண்ணை ஒரு ______

**விடை: கூட்டுறவுத்துறை**

**II. பொருத்துக.**

1. கால்நடை வளர்ப்பு - இரண்டாம்நிலைத் தொழில்
2. உணவு பதப்படுத்துதல் - சேவை
3. இரும்பு எஃகு தொழிற்சாலை - முதல்நிலைத் தொழில்
4. தொலைபேசி - வேளாண்சார் தொழிற்சாலை

**விடை:**

1. கால்நடை வளர்ப்பு - முதல்நிலைத் தொழில்
2. உணவு பதப்படுத்துதல் - வேளாண்சார் தொழிற்சாலை
3. இரும்பு எஃகு தொழிற்சாலை - இரண்டாம்நிலைத் தொழில்
4. தொலைபேசி - சேவை

**III. பொருத்திய பின் பொருந்தாத இணையைக் கண்டறிக.**

1. சிறிய அளவிலான தொழிற்சாலை - பணப்பரிவர்த்தனை
2. காடுசார்ந்த தொழிற்சாலைகள் - தகவல் தொழிநுட்பம்
3. சேவைகள் - காகிதத் தொழிற்சாலைகள்
4. வங்கி - கால்நடைகள் வளர்ப்பு

**விடை:**

1. சிறிய அளவிலான தொழிற்சாலை - கால்நடைகள் வளர்ப்பு
2. காடுசார்ந்த தொழிற்சாலைகள் - காகிதத் தொழிற்சாலைகள்
3. சேவைகள் - தகவல் தொழிநுட்பம்

4. வங்கி - பணப்பரிவர்த்தனை

**IV. வினாக்களுக்கு விடையளி**

**1. சந்தை – வரையறு.**

“கிராமங்களில் வாரம் அல்லது மாதம் ஒரு முறை பொதுவான ஓர் இடத்தில் குறிப்பிட்ட நேரத்திற்கு மக்களின் தேவைக்கேற்ற குறிப்பிட்ட பொருள்களை ஒருங்கிணைத்து விற்பனை செய்யும் இடம் சந்தை”

**2. பண்டமாற்று முறை என்றால் என்ன?**

ஒரு பண்டத்திற்குப் பதிலாக மற்றொரு பண்டத்தை மாற்றிக் கொள்வது பண்டமாற்று முறை எனப்படுகிறது.

**3. வணிகம் என்றால் என்ன?**

விற்பனையின் மூலம் பொருள்களை வாங்குவது வணிகம் எனப்படும்.

**4. சேமிப்பு என்றால் என்ன?**

சேமிப்பு என்பது கையில் கிடைக்கும் வருமானத்தில் நுகர்வுக்குச் செலவு செய்தது போக எதிர்காலத் தேவைக்காக ஒதுக்கப்படும் ஒரு தொகையாகும்.

**5. பணம் கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியம் யாது?**

“பண்டங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளும்போது பண்டங்களின் மதிப்பில் ஏற்படும் வேறுபாடு பல பிரச்சனைகளுக்கு வழி வகுத்தது. இப்பிரச்சனையைத் தீர்க்க கண்டுபிடிக்கப்பட்ட கருவிதான் பணம்.”

**6. நீர்நிலைகளுக்கு அருகில் குடியிருப்புகள் வளர்ச்சியடைவதற்கான காரணம் என்ன?**

விவசாயம் செய்வதற்கும், கால்நடைகளை வளர்ப்பதற்கும், குடிப்பதற்கும் நீர் இன்றையமையாதது. எனவே, நீர்நிலைகளுக்கு அருகில் குடியிருப்புகள் வளர்ச்சியடைந்துள்ளன.

**7. இரண்டாம் நிலைத் தொழில்கள் என்று எவற்றை அழைக்கின்றோம்?**

முதல்நிலைத் தொழில்கள் மூலம் சேகரிக்கப்படும் மூலப்பொருள்களில் இருந்து இயந்திரங்கள் மூலம் அன்றாடத் தேவைக்கான பொருட்களைப் பெருமளவில் உற்பத்தி செய்தல் இரண்டாம் நிலைத் தொழில்கள் என்றும், தொழி துறை என்றும் அழைக்கப்படுகின்றன.

**8. நகரங்களை மையமாகக் கொண்டு இயங்கும் தொழில்கள் எவை?**

மருத்துவமனைகள், கல்விநிலையங்கள், அரசு அலுவலகங்கள், நீதிமன்றங்கள், முடி திருத்தகம், அழகு நிலையம், சாலையோரக் கடைகள், உணவுக் கூடங்கள்.

**9. மூலப்பொருள் பயன்பாட்டின் அடிப்படையில் எவ்வாறு தொழிற்சாலைகள் வகைப்படுத்தப்படுகின்றன?**

- வேளாண் அடிப்படைத் தொழிற்சாலைகள் – பருத்தி, சர்க்கரை, உணவுபதப்படுத்துதல்.
- காடுசார்ந்த தொழிற்சாலைகள் – காகிதத்தொழில், மரச்சாமான்கள், கட்டுமானப் பொருள்கள்.
- கனிமத் தொழிற்சாலைகள் – சிமெண்ட், இரும்பு, அலுமினியம் போன்ற தொழிற்சாலைகள்.
- கடல்சார் தொழிற்சாலைகள் – கடல் உணவு பதப்படுத்துதல்.

**10. சேவைத்துறையில் காணப்படும் தொழில்களை எழுதுக.**

- போக்குவரத்து – சாலை, ரயில், கடல், ஆகாயப் போக்குவரத்துகள்.
- தொலைத்தொடர்பு – அஞ்சல், தொலைபேசி, தகவல் தொழில்நுட்பம்.
- வர்த்தகம் – பொருள்களைக் கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல்.
- வங்கி – பணப் பரிமாற்றம், வங்கிச் சேவைகள்.

winmeen.com